www.akaram.eu
AKARAM


# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 10.07 திருவள்ளுவர் ஆண்டு 2054 | 14.03.2023 - 13.04.2023 | ISSN : 2195-6480





## அமெரிக்க அரசின் புலிகள் மீதான புதிய தடை

## தமிழ்நாட்டில் திமுக / அதிமுக அரசியலின் அவல உண்மைகள்



# எங்கள் பகைவர் எங்கே(ா) மறைந்தார்

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA


ADS BEST FOODS
நீங்கள் இந்தப் புத்தாண்டின்
அதிஸ்டசாலியா...?
வாருங்கள்...
கொள்வனவு செய்து
நீங்களும்
அதிஸ்டசாலியாகுங்கள்
வாடிக்கையாளர்கள் மற்றும்
நண்பர்கள் அனைவருக்கும்
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்
உங்கள் இல்லங்களுக்குத்
தேவையான அனைத்து
அத்தியாவசியப் பொருட்களும்
இப்போது ஒரே இடத்தில்
எமது புத்தாண்டு
சிறப்பு தள்ளுபடி
ஏப்,05 முதல்
15 வரை மட்டுமே!
உங்கள் வீட்டில் இருந்தே
பாதுகாப்பான முறையில்
மளிகைப் பொருட்களை பெற
எமது Whatsapp
0176 45956273
இலக்கத்திற்கு
தொடர்பு ஏற்படுத்துங்கள்
Safe Fast Reliable
ADS BEST FOODS
ADS BEST FOODS
Rheinische str 79-81
44137 Dortmund
Tel : 0231 95046883
Whatsup : 017645956273




ortel MOBILE

**Book by SMS**

Are you booking an option for the first time? Send an SMS with the word
**STARTDATAL to 55300.**

You would like to replenish more internet? Send an SMS with the word
**STARTSPEEDL to 55300.**

**Book by Phone**

Are you booking an option for the first time? Select **1155**, and enter the following digits: **8-1-1-1-1.**

You would like to replenish more internet? Select **1155**, and enter the following digits: **8-1-5-8-1.**




## + Phone calls to 70 destinations

Internet Flat Highspeed up to 13 GB

National Flat call rate

To all EU countries and 40 other destinations

Internet Flat 13 GB and 250 minutes apply to all EU countries

Carefree calls to all networks in Germany and to 20 other countries

Extend to Smart World XL at any time

Now for 4weeks for "

**19,99€**




## Germany Flat

Now 20 GB instead of 15 GB for the same price

500 minutes from Germany to EU

Carefree calls to all networks in Germany

The "all-in-one package" at a low price


Ideal for frequent callers and all smartphone users

Internet flat rate and minutes packages apply to all EU countries

Neues Highspeed-Volumen can be replenished

Now for 4weeks for "

**24,99€***




## 11 GB Internet Flat

Secure your + 5 GB bonus with the Ortel Mobile app

For tablets & surf sticks


Internet telephony (VoIP) equipped

Internet flat rate applies to all EU countries

Internet telephony available
Surfing the Internet within the EU

Now for 4weeks for "

**19,99€***



**OHNE PAUSE NACH HAUSE.**

Ortel. Wir sprechen Deine Sprache.

Google play · App Store

Aufladbar mit: ortel mobile, O2, e-plus



AKARAM

# அகரம்


மாதாந்த இதழ் Monthly Magazine

14 மாசி 2023 - 13 பங்குனி 2023

சுவடி / ISSUE 10.07



**தலைமை ஆசிரியர்**

திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**

திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**

திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)
திரு. கண்ணன் (இந்தியா)

**நிழற்படப் பிரிவு**

திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**

திரு. அர்ஜுன் (ஜெர்மனி)



**தொடர்புகளுக்கு**

**European Tamils Union e.V.**
**PO. Box 13 06 31,**
**44316 Dortmund,**
**Germany**

**Tel: 00 49 176 47 11 87 11**

Email: editor@akaram.eu



ISSN 2195-6480

www.akaram.eu



No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.


## நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும், விளம்பர தார வள்ளல் பெருமக்களுக்கும் வணக்கம். எல்லாரும் எல்லாமும் நலமாக பெற்று, நலமுடனும், வளமுடனும் வாழ வாழ்த்துகிறது.**

உலகத் தமிழ் மக்களையும், குறிப்பாக ஈழத் தமிழ் மக்களின் தீராத சோகமாக ஈழத் தாயகமும், மக்களும் பட்ட துயரங்களும், அவலங்களும் முடிவே இல்லாமல் தொடர்வதே, எமது வரலாற்றின் படிப்பினையாக உள்ளது. இதில் அந்நிய மொழியின தேசத்தவர் வரலாறு முழுவதும் காரணமாக இருந்துள்ளனர் என்பது உண்மை. என்றாலும், உடன்பிறந்தே கொல்லும் வியாதி போல, காலம் எல்லாம் குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்புகளாக, அவதாரம் எடுக்கும் எமது அரசியல் தலைவர்களும், அவர்களின் தொண்டர்களாலும் தமிழ் மக்கள் பட்ட தீமைகளே அதிகம்.

அந்த வகையில் எமது வரலாற்றுச் சாதனையை பொன் எழுத்துக்களால் பொறித்த மேதகு தலைவன், வேலுப் பிள்ளை பிரபாகரனின் தோற்றமும், இன்றைய நிலையும், உலக வரலாற்று மர்மங்களின் பட்டியலில் முதலிடத்தில் திகழ்கிறது. அதற்காக அவரை மரணம் இல்லாதக் கடவுளாக யாரும் பார்ப்பதை, அவர் வழங்கிய காணொலி, நேர்காணலில் "அப்படியானவர்கள் தமது சமுதாயக் கடமைகளிலும், பொறுப்புகளிலும் தப்பிக்கும் தந்திரம்" என விளக்கம் தந்திருந்தார். அதனால் அவர் மரணத்தைக் கடந்த மகானாக நாம் நினைப்பதும், பேசுவதும் அவரது நம்பிக்கைக்கு நாம் செய்யும் துரோகம் என்பதே சரியான விளக்கமாகும்.

அந்த வகையில் அண்மையில் திருச்சியில், உலகத் தமிழ் பேரவைத் தலைவர் திரு.பழ.நெடுமாறன் ஊடகச் சந்திப்பில் பிரபாகரனும், மனைவி மதிவதனி, மகள் துவாரகா மிக்க நலமாக உள்ளனர். தலைவர் விரைவில் வெளி உலகுக்கு வந்து, தமிழ் மக்களுக்கான விடியலைப் பெற்றுக் கொடுப்பார் என அறிவித்து, கூட இருந்த ஈழக் கவிஞர் காசி ஆனந்தனுக்கும், மற்றவர்க்கும் இனிப்புப் பண்டம் ஊட்டிய காட்சிகளைப் பார்த்தத் தமிழீழத் தாயகக் கனவில் வாழும் யாரும், இரு மடங்கு மகிழ்ச்சியும், உற்சாகமும் பெற்றிருப்பர் என்பதில் நாமும் மறுப்பதற்கு இல்லை.

அந்த அறிவித்தல், தமிழ் மக்களின் எதிர்கால நலனுக்கு வரமா? சாபமா? எனப் பார்க்க வேண்டிய கட்டாயத்தில் தமிழ்த் தேசியவாதிகள் உட்பட்டுள்ளனர் என்பதை, வெளி வந்து கொண்டிருக்கும் பின் நிகழ்வுகள் பற்றிய செய்திகள் கவலை தருகின்றன.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டே ஆகவேண்டும் என்ற கண் மூடித்தனமான பழி வாங்கல் மனோ நிலையில், மாற்று இயக்கங்களும், எல்லா தமிழ்

அரசியல் கட்சிகளும், இலங்கை - இந்திய மற்றும் போரில் பங்காற்றிய எல்லா உலக அரசுகளும், பழைய அதே மன நிலையில் தலைவரின் மீள் வருகை என ஒன்று இருக்கும் என்றால், திரும்பவும் ஒரு முள்ளி வாய்க்கால் காட்சிகளை ஈழ மண்ணில் நிகழ்த்திக் காட்டத் தயங்க மாட்டார்கள். அதற்கு முன்னணியில் அதே மாற்று இயக்கங்களும், அவற்றை உருவாக்கிச் செயற்படுத்தி வரும் தமிழ் அரசியல் கட்சிகளும், நின்று நடத்தும் மனோ நிலையில்தான் இன்னமும் அவர்கள் உள்ளனர்.

வரலாற்றில் காலம் மாறுவதும், அதனால் காட்சிகள் மாறுவதும் இயற்கையின் நியதி என்பதை, எந்த விஞ்ஞானமும் மறுப்பதில்லை. வெற்றி பெற்ற சாதனையாளர்கள் கைவசம் உள்ள இடம், பொருள், ஏவல் கருதித் தமது காட்சிகளையும், களங்களையும் மாற்றுவது வெற்றிக்கான வழி என்பதும் உண்மையே!.

மறைந்தும், மறைத்தும் போராடும் கொரில்லா அல்லது கரந்தடிப் போரில் தம்மை உட்படுத்தி, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நம்பி, அதில் பல தசாப்தங்களாக வாழ்ந்து போராடிய எமது தலைவருக்கு 2009, மே மாத தொடக்க நாட்கள் மிகப் பெரும் இழப்புகளையும், தோல்விகளையும் அள்ளிக் கொடுத்த காலம். அதனால் அவர் தமது போராட்டம் தோல்வி அடைந்துவிடக் கூடாது என்பதற்காக, ஓர் அடியைப் பின்னுக்குப் போய், ஒன்பது அடியை முன்னே போகும் போர் முறையை மேற் கொண்டார் என்பதை, களத்தில் நடந்தவை பற்றிய குழப்பமான, குதர்க்கமான வாதப் பிரதிவாதங்கள் வெளியாகி வருகின்றன. அதனால் அவரின் மீள் வருகை என்பது 99.99 வீதம் சாத்தியமே!.

அவர் இல்லாத களத்தில், அவரின் எதிரிகள் எல்லோரும் மக்களால் நாட்டை விட்டே ஓடியும், துரத்தப்பட்டும் வரும் நிலையில், கூத்து மேடை இராசாவாக இன்று ரணில் விக்கிரம சிங்க, தலைக்கு மேலே தொங்கும் வாளுடன் ஒவ்வொரு கணத்தையும் எண்ணிக் கொண்டிருக்கிறார்.

போரில் இந்தியாவைப் புகுத்தும் நோக்கத்தில் இந்திய முதலீட்டாளர்களைக் குறிப்பாக, அம்பானியின் றிலாயன்ஸின் வோடா போன் தொலைப்பேசி நிறுவனத்தை, வன்னிப் பரப்புக்குள் அமைதிக்கானப் பரிசுப் பொதியாக ரணில் அறிமுகப்படுத்தியதால், சாதாரணப் பொதுத் தமிழ் மக்களிடம் அவர் அமைதி வரம் தரப்போகும் ஆண்டவனாகப் பார்க்கப்பட்டார். ஆனால் தலைவர் பார்வையில், தொலைத் தொடர்புக் கோபுரங்கள் உருவாக்கும், மின் காந்த அலைகளால் சிட்டுக் குருவிகள் உட்பட உயிரினங்கள் அழிக்கப்படும் காரணத்தைச் சொல்லி, அவற்றை நிராகரித்தார். அதனால் கோபம் கொண்ட ரணில், இயக்கத்தை அழித்து விடக் கருணாக்களை உருவாக்கி, அதில் வெற்றியும் பெற்றார். ஆனால், தலைவர் அவரை மீண்டும் மக்களின் தலைவனாக வர முடியாதவாறு, தமிழ் மக்களை வாக்களிப்பு புறக்கணிப்பைச் செய்து, மகிந்தர் ஆட்சிக்கு உதவினார். அதற்காகத் தலைவர் இலஞ்சம் பெற்றார் என்கிற அவச் சொல்லையும் பெற்றார்.

இப்படிப் பல சறுக்கல்களைச் சந்தித்த தலைவர், மாற்று தமிழ் ஈழ விடுதலைப் போராட்ட இயக்கங்களையும், தமிழ் அரசுக் கட்சியையும் நம்பி, சம்பந்தன் தலைமையில் புலிகளின் அரசுக்காக, உலக அங்கீகாரத்தை ஜனநாயக வழியில் பெறுவதற்காக, தமிழர் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கி, அவர்கள் இழந்து போயிருந்தத் தமிழ் மக்களின் ஆதரவை ஏற்படுத்தி, பாராளுமன்றம் போக வைத்தார்

அந்தக் கூட்டமைப்பே போரின் உச்சக் கட்டத்தில் எதிரணிக்காக உதவும் நோக்கில், இந்தியாவின் தி.மு.க. - காங்கிரஸ் கட்சிகளின் தலைவர்கள் கலைஞர் கருணாநிதி, சோனியா தலைமையிலான இந்தியக் காங்கிரஸ் தலைவர்களிடம் தஞ்சம் புகுந்து புலிகளையும், தமிழ் மக்களின் இன அழிப்புக்குத் துணை போயினர். இப்படி எல்லாராலும் கைவிடப்பட்டு, காட்டிக் கொடுக்குப்பட்ட நிலையில்தான் தலைவர் தமது ஒரு காலைப் பின்னெடுத்தார் . உண்மைக் கரிகாலன் வெளிப்படும் வெளிச்சம் தெரிகிறது. எனவே பொறுமையுடன் காத்திருப்போம்.

அமெரிக்க, இந்திய, சீன ஓநாய்கள் இலங்கையின் ரணில் அரசின் பின்னால் தமிழ் இரத்தம் குடிக்கக் காத்திருக்கின்றன. மிகப் பெரும் ஓநாய்களான டி.எஸ். தொடக்கம், ரணில் வரை எத்தனையோ ஓநாய்களைத் தமிழினம் சப்பித் துப்பிய வரலாறு எம் இனத்துக்கு உள்ளது.

எனவே, எவர் என்ன சொன்னாலும், எமது பலத்தையும், வளத்தையும் இழந்து விடாமல், நம்பிக்கையோடு நம் உறவுகள் தமது அரசியல் போராட்டத்தை, உலக நாடுகள் தெரிந்து, புரிந்து கொள்ளும் வரை எமது நிதானங்களை இழக்காமல், வலுவான பிரச்சாரங்கள் மூலம் தனித் தமிழ் ஈழத்தை விரைவில் மலரச் செய்வோம்.

மீண்டும் வரும் வரை விடை பெறும்,

**ஆசிரியர்,** **அகரம் குழுமம்**



த. எதிர்மன்னசிங்கம்

# அமெரிக்க அரசின் புலிகள் மீதான புதிய தடை

அமெரிக்க அரசாங்கத்தின் 2021 நாடுகளின் பயங்கரவாதம் தொடர்பான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் இலங்கையில் 2021ஆம் ஆண்டில் பயங்கரவாதச் சம்பவம் எதுவும் பதிவாகவில்லை என்ற போதிலும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மறுசீரமைக்கப் படுகின்றமையால் இன்னும் அச்சுறுத்தல் உள்ளதாக இலங்கை அரசு கருதுவதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், இதன் காரணமாக இலங்கையின் பயங்கரவாத எதிர்ப்புத் திறன்களை மேம்படுத்துவதற்கும், அமெரிக்கா மற்றும் சர்வதேசப் பங்காளிகளுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் எல்லைப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், இலங்கை மேற்கொண்டு முயற்சி செய்வதாக அமெரிக்க அறிக்கைச் சொல்கிறது.

பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்தின் எழுச்சி, இலங்கையில் பாதுகாப்பு அச்சுறுத்தலாக இருந்தாலும், விடுதலைப் புலிகளின் நீண்டகால செயற்பாடுகள் இலங்கையிலும், சர்வதேச அளவில் புலம்பெயர்ந்த நாடுகளிலும் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் என்று இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் கவலை வெளியிடுகின்றனர்.

## யார் பேசுவது உண்மை?




**பழ.நெடுமாறன், காசி ஆனந்தன் அணியா? அல்லது இலங்கை இந்திய ஆதரவாளர்கள் உட்பட்ட போலி அரசியல் ஆய்வாளர்களா?**

இந்நிலையில், பயங்கரவாதத்தை எதிர்கொள்வதில் இலங்கைக்கு எவ்வாறு ஆதரவளிப்பது? என்பது குறித்து குவாட் நாடுகளான இந்தியா, அவுஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா என்பவற்றுடனும், ஒரே எண்ணத்தைக் கொண்ட பங்காளிகளுடனும் கலந்துரையாடியுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

### கோமாளிகளே இப்பொழுதாயினும் தெரிகிறதா உங்களின் தமிழ் இனத் துரோகம்?

இலங்கை அரசைப் பொறுத்தவரை தனது தோல்விகளை மறைக்க, பிரபாகரன் கொல்லப்பட்டார் அல்லது மரணம் அடைந்தார் எனப் பொய்யான அறிவித்தலை உண்மை என வெளி உலகுக்குச் சொல்ல முடியாத நிலை.

உலகறிய பி.பி.சி.தொலைக் காட்சி நிறுவனத்துக்கு வெள்ளைக் கொடிகளுடன் சரண் அடைந்த மக்களையும், நடேசன் தலைமையிலான போராளிகளையும் தானே கொன்றேன் எனப் பகிரங்கமாக வாய்ச் சவடால் அடித்த கோட்ட பாயாவினால், மேதகு தலைவர் பிரபாகரனை எப்போ, எங்கே, எப்படிக் கொன்றோம்? என ஏன் இன்று 14 வருடங்கள் முடிகின்ற நிலையிலும் சொல்ல முடியவில்லை?

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் மேதகு தலைவர் வே. பிரபாகரனின் மரணம் பற்றிய சர்ச்சைகள், அது நிகழ்ந்ததாக இலங்கை அரசு தெரிவித்த 2009 மே மாதம் 17ந் திகதி தொடக்கம், நாளொரு வண்ணம், பொழுதொரு மேனியுமாக விவாதத்துக்கும், வில்லங்கத்துக்கும் உரிய விடயமாக விஸ்வரூபம் எடுத்தபடியே வானளாவ வளர்ந்து விட்டது. இதன் உச்சக் கட்டமாக உலகத் தமிழர் பேரவை தலைவர் திரு.பழ. நெடுமாறன், ஈழத்துப் புரட்சிக் கவிஞர் திரு.கா.சி.ஆனந்தன் மற்றும் வேறு சிலரும், 13.02.2023 இல் தஞ்சாவூரில் உள்ள முள்ளிவாய்க்கால் முற்றத்தில் ஒரு ஊடகச் சந்திப்பை நடத்தி, “மேதகு தலைவர் பிரபாகரனும், மனைவி, மகள் துவாரகா எங்கோ தலைமறைவாக, நலமாக உள்ளனர். தலைவர் பிரபாகரன் வெளிப்படும் காலம் வந்து விட்டது. அதனால் அவர் ஈழத் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுத் திட்டத்துடன் வருவார். யாரோ சொன்னார்கள், அதனால் சொல்கிறேன்” எனக் கிளிப் பிள்ளை போலப் பேசினார்.

சத்தமில்லாத சங்கைப் போலக் கிடந்த ரெலோ தலைவர், சித்தார்த்தன் பிரபாகரனின் மனைவி, மகள் இருக்கும் இடத்தை வெளிப்படுத்தி, அவர்களைப் புதிய நெருக்கடிகளுக்குள் சிக்க வைத்துப் பழைய பழியைத் தீர்த்துக் கொண்டார்.

எனவே அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளும், மற்றைய அமைப்புகள் எல்லாம் ஒன்றாக இணைந்து, இந்திய அரசின் ஆதரவைத் திரட்ட வேண்டும் எனத் தெரிவித்து, கூட இருந்தவர்களுக்கு இனிப்பை (அல்வா) ஊட்டிக் கொண்டாடும் கோமாளித்தனம் யாருக்காக, யார் சொல்லி ஆடினீர்கள்?

நெடுமாறன் புலிகளையும், தமிழ் இனப் படுகொலைகளையும் செய்வதில் தலைமை வகிந்த இந்தியக் காங்கிரஸ்









கட்சியின் கொத்தடிமை.போரின் உச்சக் கட்டத்தில் சம்பந்தன், கொம்பனியைப் புலிகளிடம் இருந்து தமது கட்டுப் பாட்டுக்குள் வைத்திருந்த ப.சிதம்பரம், நெடுமாறன், தமிழினத்தை அழித்த இந்தியக் காங்கிரசின் கொத்தடிமை. காசி ஆனந்தன், ரெலோ அமைப்பின் அப்பாப் பிள்ளை அமிர்தலிங்கத்தின் கூட்டுத் தமிழினத் துரோகி.

புலிகளை அழிக்க இந்தியக் காங்கிரசின் சோனியா, ப.சிதம்பரம் இவர்களின் அரசியல் கோரிக்கை 13ஆவது திருத்தம் அல்லது ஏதாவது ஒரு தீர்வு என மகா மோசமான, மட்டமான கோரிக்கையை ஈழத் தமிழ் மக்கள் சார்பாக யாசகம் அல்லது மடிப் பிச்சை போன்று கேட்டதுதான் கோமாளித் தனத்தின் உச்சக் கட்டம். மற்றொரு மகா மோசடித் தனமாக முக்காடு போட்ட இரு பெண்களைக் காட்டி, தலைவரின் மனைவி, மகள் எனக் காண்பித்தமை விளங்கியது.

30 வருடங்களுக்கும் மேலாக அறவழியிலும், ஆயுதம் ஏந்தியும், 20க்கும் மேற்பட்ட உலக அரசுகளின் ஆதரவுடன் இந்திய, இலங்கை இராணுவத்தை ஓட விரட்டி உருவாக்கியும், சகல அரச நிறுவனக் கட்டமைப்புகளையும் உருவாக்கியும், உலக அரங்கில் அங்கீகாரம் வேண்டி அமைதிப் பேச்சுக்களை நடத்திய ஈழத் தமிழ் மக்களின் மேதகு தலைவனையும், தமிழ் இனத்தையும் இந்த அளவு இழி நிலைக்குக் கேவலப்படுத்தும் துணிச்சலை இவர்களுக்கு யார் கொடுத்தது?

## பிரபாகரன் எங்கே?

இலங்கை அரசு சொல்வது போல அவர் கொல்லப் பட்டாரா? கொல்லப் பட்டால் எங்கே, எப்போது, எப்படிக் கொல்லப்பட்டார்? என்பதை இலங்கை அரசு, 14 ஆண்டுகள் முடியும் நிலையிலும் சொல்லாமல் இருப்பதன் மர்மம் என்ன? அவரது உடலைக் கூடக் கேள்விகளுக்கு அப்பால் நம்பகமான ஆதாரங்களுடன் ஊடகங்களில் காண்பிக்காமல் இருப்பது ஏன்?

வெல்ல முடியாத வீரனை, வென்று விட்டோம் என வெண் பொங்கலிட்டு, கொழும்பு வீதிகளில் கொண்டாடிக் குதூகலித்தச் சிங்களத்தால், அந்த வீரனின் செத்த உடலைக் கூடக் காட்ட முடியாத சிங்கள அரசு, காண்பித்த உடலை மரபணுச் சோதனை மூலம் உறுதிப்படுத்தாத அரசு, பிரபாகரனைக் கொன்றார்கள் என்பதை எப்படி நம்புவது?

வெள்ளை கொடியோடு சரண் அடைந்த நடேசனையும், அவரோடு சென்ற போராளிகளையும், பொது மக்களையும் தாமே கொன்றதாக பி.பி.சி. தொலைக்காட்சி பேட்டியில் பெருமை அடித்த கோட்டாயாவால், பிரபாகரனைக் கொன்றோம் என ஏன் சொல்ல வில்லை? அல்லது சொல்ல முடியவில்லையா?

எங்கோ எடுத்த எவருடையதோ உடலைக் காண்பித்து விட்டு, அதையும் எரித்துக் கடலில் கரைத்து விட்டோம் எனக் கதை அளந்தால் யார் நம்புவார்?

இப்படித்தான் இலட்சக்கணக்கான எமது உறவுகளின் உடல்களை எரித்துக் கடலில் கரைத்தார்களா? கணக்கற்ற எமது பெண் போராளிகளின் ஆடைகளைக் களைந்து, அம்மணமாக்கி, ஈனத்தனமாகப் புணர்ந்தும், லாரிகளில் மரக் கட்டைகளைப் போல எறிந்து ஏற்றியும், சிங்களத்தில் கொச்சையாக இழிந்து பேசியும், சிங்கள இராணுவம் அடித்த

காட்சிகளை சனல் 4 ஆங்கிலத் தொலைக்காட்சி ஒளிபரப்பியதே, அப்படியான சிங்கள இராணுவம் பிரபாகரன் சிக்கி இருந்தால், அவரது உடலைப் புத்தப் பிக்குகளை வைத்துப் பிரித் ஓதியா எரித்திருக்கும்?

ஆகவே பிரபாகரனைக் கொன்றதற்கான ஆதாரங்களோ, உயிருடன் பிடிபட்டதற்கான ஆதாரங்களோ இல்லாத நிலையில், யாரும் பழ.நெடுமாறன் தரப்பினர் கூறும் செய்திகளை ஏன் நம்பக் கூடாது? அரசுக்கும் உண்மை தெரியாது. அதனால் பொய்களால் மூடி மறைக்க எல்லாரும் தொன் கணக்கில் பொய்களைச் சொல்கிறார்கள். மற்றும் ஒரு பகையாளியான இந்தியாவும் உண்மை தெரிந்தாலும், அதை வெளியில் சொல்லாமல் வாய்க்குள் கொழுக்கட்டை வைத்து இறுக மூடி மௌனம் காக்கிறது. அது புலிகளின் மீதான தடையைத் தனக்குச் சாதகமாகக் கொண்டு புலிகளையும், ஈழத் தமிழருக்கான அரசியல் தீர்வையும் அடக்கி அழிக்கும் செயலைச் செய்து, சிங்களத்திடம் காதல் பிச்சை கேட்கிறது.

சிங்களத்தின் வெறுப்பு எல்லாம் இந்தியாவின் மீதும், தமிழ் இனத்தின் மீதும், அசோக மன்னன் புத்த மதத்தைத் திணித்த நாள் தொடக்கம் 2,500 வருட காலமாக வட இந்திய தெலுங்கு வம்சாவளி புத்த பிக்குகளால் எழுதப்பட்ட மகாவம்சம், சூளவம்சம், கோகில சந்தய போன்ற புத்த மத நூல்களால் கொலை வெறி உணர்வுகள் வளர்க்கப்பட்டதால், தமிழினம் முழுமையான இனஅழிப்புக்கு உள்ளாகி, அழிந்து கொண்டிருக்கிறது.

மேலும் சேர, சோழ அரசர்களின் தொடர் படை எடுப்புகள், போர்களால் இலங்கை, இந்தியத் தமிழர்கள் மீது ஆரிய சிங்கள பௌத்த இனமத வெறியால் இலங்கை, இந்தியத் தமிழர்கள் மீது ஆரிய சிங்கள பௌத்த இனமத வெறி தலைவிரித்தாடும் தீவாக இலங்கை மாறி, தமிழர்களின் இரத்தக் கடலில் மிதந்து கொண்டிருக்கிறது.

இவற்றை வட இந்திய ஆரிய பிராமண ஆட்சி ஆதிக்கத்தில் சிக்கி விட்ட இந்திய துணைக் கண்டம், இலங்கை இந்தியத் தமிழர்களை இராவணன் வழித் தோன்றல்களான இராட்சதர்கள் எனவும், தங்களின் ராமனின் ஆரிய வழித் தோன்றல்களாக இலங்கைச் சிங்களவர் ஆதரவு வெளி உறவுக் கொள்கையை நியாயப்படுத்த பா.ஜ.கவின் முன்னாள் தலைவரும், முன்னாள் இந்தியப்




பிரதமருமான எல்.கே.அத்வானி இந்தியப் பாராளுமன்றத்திலேயே 1990இல் பிரகடனம் செய்தார்.

1991இல் இடம்பெற்ற ராஜீவ் காந்தியின் படுகொலையில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளையும், அதன் தலைவர் பிரபாகரனையும் தொடர்புப்படுத்தி, பயங்கரவாதப் பட்டியலில் வைத்து, உலக அரங்கில் எம் இனத்துக்கு இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களுக்கு நீதியோ, நிவாரணங்களோ, நியாயமான அரசியல் தீர்வையோ எங்கேயும் பெற முடியாத நிலையைப் பதவியில் வரும் எல்லா இந்திய அரசுகளும் போடும் இந்தியாவின் தடை ஏற்படுத்தி வருகின்றன.

இந்தியச் சட்டங்களின் படியும், உலக நீதிகளின் படியும் ராஜீவ் கொலைக் குற்றத்தை நடைமுறைச் சட்டப்படி விசாரிக்காமல், சிறப்புச் சட்டத்தின் கீழ் விசாரித்தும், தண்டனைகளை வழங்கியும், ராஜீவ் காந்தி கொலை விசாரணை பன்முக ஆணை விசாரணைக்கு உட்படுத்தி, 20 வருடங்களுக்கும் மேலாக எந்தத் தீர்ப்பும் வழங்கப் படாத நிலையில், புலிகள் மீதான தடை சாகா வரம் வழங்கப்பட்டு, சிரஞ்சீவியாகத் தமிழரை நீதிக்கும், சட்டத்துக்கும் புறம்பான வழிகளில் அடக்கியும், அழித்தும் வருகிறது.

இந்தியாவில் எந்த நீதிமன்றத்திலும், யாராலும் நீதி கோரி வாதாட முடியாத படிக்கு உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியா தமிழ் மக்களை அடக்கி வருகிறது.

அதே கொள்கையைத்தான் தி.மு.க. தலைவர், தமிழக முதல்வர் கருணாநிதி வழங்கிய ஆதரவுடன் ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சி, தமிழருக்கு எதிரான படை எடுப்புகளை 1987லும், 2007லும் நடத்தி, 2009ல் மே மாதம் மிகப் பெரும் தமிழின அழிப்பை இலங்கையின் சிங்கள அரசுடன் இணைந்து நடத்தியது.


அறிஞர் அண்ணாவுக்கு.....

முன்னாளில் அரசாண்டோர்
மூவரென வரலாறு
சொன்னாலும் மூவரசர்
தோற்றங்கள் மூன்றினையும்
தன்னுள்ளே கொண்டொருவன்
தமிழ்மகனாய் இந்நாளில்
தென்னாட்டு மன்றத்தே
திகழ்கின்றான்... விடுவேனா...?
அண்ணாவின் அடிமலர்மேல்
அழகான தமிழ்அடிகள்
பண்ணிநான் ஆவலொடும்
பணிவோடும் வைக்கின்றேன்..
அண்ணாவின் அடிதொடரும்
அறுகோடி மானிடரின்
பொன்னடிகள் தடம் பதிந்து
புகழ்மணக்கும் தமிழ்நாடே!

— காசி ஆனந்தன்

....அன்புப் படையல்.

இந்த நிலையில் இலங்கை நீதிமன்றத்தால் தடைசெய்யப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டமும், தமிழ் மக்களுக்குக் கடுகளவும் பயனளிக்காத மாகாண சபைகளையும், பெற்றுத் தரச் சொல்லும் தமிழ் புல்லுருவி அரசியல் கட்சிகளும், தலைவர்களும், தமிழ் மக்களை அரசியல் படுபாதாளத்தில் தள்ள முயல்கிறார்கள்.

பழ.நெடுமாறனும், காசி ஆனந்தன் அணியினர் இன்னும் கீழே விழுந்து புரண்டு, ஏதாவது தீர்வைத் தாருங்கள் என மோடி அரசிடம் மண்டியிடும் அவலம் அரங்கேறுவதைக் காண்கிறோம்.

மிகப் பெரும் போரை நடத்தி, உலகையே அதிர வைத்த தமிழீழ விடுதலைப் புலகளின் தியாகத்தையும், இலட்சக் கணக்கான தமிழ் பொது மக்களையும் பலி கொடுத்த நிலையில், உலக நாடுகள் மத்தியில் புலம்பெயர் தமிழ் உறவுகள் 14 வருடமாகப் போராடி, ஒரு நிலையான அரசியல் தீர்வை எட்டப் போகும் நிலையில், தாழியைத் தட்டி உடைத்து, வெண்ணெயை எடுக்க விடாமல் செய்த காசி. ஆனந்தன், ஒரு தி.மு.க.அடிமை என்பதை உறுதிப்படுத்த அண்ணா பற்றிய இந்தக் கவிதை வரிகளே போதுமான சான்று. இன்றும் அவரது செயற்பாடுகள் தி.மு.க., பா.ஜ.க மோடி அரசின் அரசியல் தேவைக்காக, ஈழத் தமிழருக்கு எந்த விடிவும் வந்துவிடக் கூடாது. வந்தாலும், அது புலிகள் போராடியத் தனித் தமிழ் ஈழமாக இல்லாமல், அமிர்தலிங்கம் தமிழரசுக் கட்சியின் ரெலோ இயக்கத்தின் சாதனையாக, ஏதாவது ஒரு தீர்வு எனப் பிச்சை கேட்கிறார்கள்.





Kings
Niru
LEELA
Suryaa
LION
Maliban
Double Horse
Tilda

IMPORTAS

*International Foods & Beverages*

www.importas.ch
info@importas.ch

மொத்த விற்பனை நிலையம்

Schwaresterstrasse 2, 5604 Hendschiken
Sales : 052 672 28 38, Admin : 052 672 28 34, Fax : 052 672 28 39
info@subash.ch www.subash.ch

Baslerstrasse 102
8048 Zürich
Tel : 043 343 03 55
Fax : 043 343 03 56

Kranichweg 8
3074 Muri bei Bern
Tel : 031 951 24 44

எமது புதிய கிளை
EO Tychboden Parkweg 2
4665 Oftringen
வெகுவிரைவில்...

TRS
Aachi
Maggi
PG tips
Rubicon
ELAKKIA
OKF

**சேதுராமலிங்கம்**

## சென்ற மாத தொடர்ச்சி...

1. அடிப்படையில் அவலத்தில், தியாகத்தில், இழப்புகளில் இருந்துதான் தயனிசியப் பண்புகள் பிறக்கின்றன. அப்பண்புகள்தான் ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கான அரசியலிலிருந்து, அறிவு வரைக்கும் அனைத்திற்கான அடித்தளம். பெரும் கட்டிடத்தைப் பார்க்கும்பொழுது, பலர் பிரமித்துப் போகின்றனர். ஆனால், அக்கட்டிடத்தைத் தாங்கி நிற்கும் அடித்தளம் கண்ணுக்குத் தெரிவதில்லை. அதேபோல ஆலமரத்தை வியந்து பார்ப்பவன், அதன் சிறிய விதையை எண்ணுவதில்லை. அதுபோன்ற ஒரு மாயைதான் சமூகத்தைப் பற்றிய பலரின் சிந்தனையும் இருக்கிறது. ஒரு சமூகத்தின் விதை என்பது உன்னத தியாகத்தில் பிறக்கிறது. அதை ஊற்றி வளர்க்கும் சமூகம் மாபெரும் வளர்ச்சி அடைகிறது. தியாகத்தை மறக்கும் சமூகம், வேரிழந்த மரம் போல, அழுகிய அடித்தளம் கொண்ட கட்டிடம் போல சிதைந்து காணாமல் போகிறது.

2. அனைத்து கடவுள்களும் தியாகத்தில், அவலத்தில் உருவானவர்களே!. பல போர்களை வென்ற இராசராசன் கடவுளாகப் பார்க்கப்படுவதில்லை, ஆனால், நெறிதவறாது அவலங்களை எதிர்கொண்ட கண்ணகி, மதுரைவீரன் ஆகியோர் இன்றும் கடவுளாகப் பார்க்கப் படுகின்றனர்.

“ஒவ்வொரு கடவுளும் தியாகியே!” என்கிறார் இரினே செராடு. ஒரு சமூகத்தின் அடித்தளம் தியாகத்தில் இருப்பதால், ஒவ்வொரு சமூகத்தின் கட்டுக்கதைகளில் போர் இருக்கும். அதில் பங்கு பெற்று, தியாகங்கள் செய்தவர் கடவுளாகிறார். இவ்வாறுதான் முருகன் கடவுளானார். ஏன் தியாகம் செய்பவர் கடவுள் ஆகவேண்டும்.? ஏனெனில் அந்தத் தியாக வரலாறுதான் மனதைத் தூய்மைப்படுத்தி, நன்னெறியில் மக்களை வழிநடத்துவதற்கான தயனிசிய உணர்வுகளைத் தூண்டுகிறது. ஒரு சமூகத்திற்கான தயனிசிய உணர்வுகளை யார் அளிக்கிறாரோ, அவர்தான் கடவுளாகப் பார்க்கப்படுகிறார். இது மனிதனின் பொது உளவியல்; காட்டு வாசிகளிலிருந்து, உயர் நாகரீகங்கள் வரை இது நடக்கிறது. இன்று பிரபாகரன் தமிழ் சமூகத்தில் பலரால் கடவுளாகப் பார்க்கப்படுவதற்கான காரணமும் இதுதான்.

3. நீரைப் பருகினால் தாகம் அடங்கும். ஆனால், தயனிசியனைப் பருகப் பருக தாகம் அதிகரிக்கும், ஆனால், தொடர்ந்து பருகாவிட்டால் தாகம் நீங்கும். உதாரணமாக ஈழப்போரின் பொதுப் போராளிகளின் தியாகங்கள் என்பது, தினந்தோறும் நடக்கும் நிகழ்வு. அது மக்களின் மனதில் தினமும் சென்றடைந்து, மக்களிடம் தயனிசிய உணர்வுகளைப் பெருக்கி போராட வைத்தது.



# தமிழினத்தின் தயனிசியன் பிரபாகரன்

இது களத்தில் மட்டுமல்ல, புலத்திலும் நடந்தது. புலத்திலுள்ள மக்களையும் ஒன்று திரட்டி, செயல்பட வைத்தது. இது தொடர்ந்து தயனிசியனைப் பருகியதன் விளைவாக நடந்தது.

இதுதான் சிறிய இயக்கத்தை முப்படைகளாக வளர்த்தெடுத்தது. 2009 இன் பேரழிவும், பெருந் தியாகங்களும் மக்களைக் கொந்தளிப்பு நிலையின் உச்சிக்குக் கொண்டு சென்றது. ஆனால், இன்று என்ன நடக்கிறது? ஒரு நண்பர் கூறினார், “முன்புபோல இப்பொழுது மாவீரர் நாளில் மக்கள் பங்கெடுப்பதில்லை” என்கிறார். புலத்தில் முன்புபோல தயனிசியன் மக்களால் பருகப்படவில்லை, அதனால் மக்களின் பங்களிப்பும் குறைந்து கொண்டே செல்கிறது. மேலும் தமிழ்நாட்டில் தயனிசிய உணர்வுகளால் கொந்தளித்து திமுகவைத் திட்டிய பெரும்பான்மையான அறிவு சீவிகள் இன்று அடங்கி விட்டனர். இன்று போர் இல்லை என்பது, ஒரு காரணம் என்றாலும், அதை முழுமையாகக் குற்றம் சாட்ட முடியாது.

தயனிசிய உணர்வுகள் என்பது தோன்றி, நிரந்தரமாக இருப்பது அல்ல. அதைத் தொடர்ந்து ஊட்டிக் கொண்டே இருக்க அமைப்புகள் தேவையானது. வருடம் ஒருமுறை மாவீரர் நாளுக்கு என்று கூடினால் போதாது. குறைந்தது வாரம் ஒருமுறை என்று கூட வேண்டும். தொடர்ந்து கலைகள், இலக்கியம், கல்வி என்று அனைத்து வழிகளிலும் ஊட்டப்பட வேண்டும். இதுதான் யூதர்கள் செய்வது. அவர்கள் அதற்கேற்ற கட்டுமானங்களை உருவாக்கி, மக்களை உணர்வுகளுடன் வைத்திருக்கிறார்கள்.

நமக்கு உலகின் எந்த இனத்திற்கும் கிடைக்காத ஆழமான தயனிசிய உணர்வுகளை உருவாக்கும் பிரபாகரன் கிடைத்துள்ளார். நாம் அவரை சரியாக பயன்படுத்துவதற்கானக் கட்டுமானங்களை உருவாக்கவில்லை என்பதுதான் இன்றைய சிக்கல். இன்று புலம்பெயர் நாடுகளில் தமிழ் பள்ளிகளில் பிரபாகரன் கற்பிக்கப்படுவதில்லை. பள்ளிகள் அரசுகளின் உதவிகள் பெறுவதால், அரசுகளின் ஆணைக்குக் கட்டுப்பட்டு, பிரபாகரன் நீக்கப்பட்டு விட்டார். இதைப் போன்று ஒவ்வொரு பலப் பொது நிகழ்வுகளிலும், பல அழுத்தங்களின் காரணமாக தயனிசியன் நீக்கப்படுகிறது. இது கரும்பின் சாறை பிழிந்து எடுத்துவிட்டு, சக்கையைத் தின்பது போன்று. நமது உத்திகள் மாறவேண்டும்.




யூதர்கள் யாருக்காகவும் தங்களது தயனிசியனை விட்டுக்கொடுக்க மாட்டார்கள். அதுபோன்று தயனிசியன் நமது வாழ்வின் மையமாக மாறவேண்டும்.

ஒரு சமூகத்தின் முடிவிலா ஆட்டம் என்பது, அச்சமூகத்தில் தயனிசிய உணர்வுகள் இருக்கும்வரைதான் நடக்கும். எப்பொழுது உணர்வுகள் இல்லையோ, அப்பொழுது மக்கள் பிளவுண்டுச் சிதறி, அடையாளங்களைத் தொலைத்து, காணாமல் போய்விடுவர். ஒரு தனித்த நாடு இருந்தால், அது சட்டங்களை இயற்றி, அடையாளங்களைக் காக்க முடியும். ஆனால், நாடற்ற நமக்கு தயனிசியன் ஒன்று மட்டுமே துணை. நமது எதிரிகள் பிரபாகரனைப் பற்றிய அனைத்திற்கும் தடையிடுகிறார்கள். இதன் உண்மையான நீண்டகால நோக்கம் என்பது, நம்மை அழித்தொழிப்பதே.! பிரபாகரன் என்ற தயனிசியனை மக்கள் பருகும் வரை தமிழினத்தை யாராலும் அழிக்க முடியாது.

இவ்விடத்தில் தமிழ்நாட்டு தமிழ்த்தேசிய இளைஞர்களையும், தலைவர்களையும் பாராட்டியே ஆகவேண்டும். பல இடையூறுகளையும் தாண்டி, பிரபாகரனை பட்டிதொட்டி எங்கும் எடுத்துச் சென்றுள்ளனர். போர் தியாகங்களை அதிக எடுத்துரைத்து, பரப்புரை செய்கிறார்கள். அதன் மூலம் தமிழ்நாட்டு மக்களை தயனிசியனை பருகவைத்து, ஒன்று திரட்டுகிறார்கள். சொல்லப்போனால் புலத்தில் உள்ளவர்களுக்கும், தமிழ்நாட்டின் வழியாக தயனிசியன் ஊட்டப்படுகிறது. இது உலகெங்கும் நடக்கவேண்டும், தொடர்ந்து நடக்கவேண்டும், பண்பாடாக மாற வேண்டும்.

4. இவ்வுலகு பலம் வாய்ந்தவர்களால் தீர்மானிக்கப்படுகிறது என்பது, உண்மை. ஆனால் அவர்களின் அந்த பலத்தை உருவாக்கியது எது என்று பார்த்தால், அவர்களின் ஒற்றுமை, அறிவுத்தின், செயற்பாடு என்று வரும். அவற்றை உருவாக்கியது எது என்றால்? அது தயனிசியனில் போய் இறுதியில் நிற்கும். எதிரிகளின் பலத்தைக் கண்டு கலங்க வேண்டியதில்லை. அனைத்து பலத்தின் மூலவர் தயனிசியன். அதில் உலகத்திலேயே ஆற்றல் வாய்ந்தது நமக்குக் கிடைத்திருக்கிறது. அதை நாம் சரியாகப் பயன்படுத்தினால், நாம் உலகின் தலைசிறந்த நாகரீகமாக மாறுவோம். இன்று எதிரிகள் உட்பட பல நாகரீகங்களின் வேர்கள் அழுகும் நிலையில் இருக்கின்றன. எதிரிகளின் ஆற்றலைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை. நாம் இப்பொழுதுதான் மீண்டும் விதையிலிருந்து முளைக்க ஆரம்பிக்கிறோம். சரியாக முன்னெடுத்தால், நமது எதிர்காலம் எல்லையில்லாதது. யூதர்கள் இப்படித்தான் பிழைத்தார்கள். பலம் முக்கியமல்ல, தயனிசியன்தான் முக்கியமானது; அதிலிருந்துதான் பலமே பிறக்கிறது.

**(தொடரும்)**




யேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி நவநாகரீகத்தில் மகாராணி
Jasmine Silk House
2023ஆம் ஆண்டின் புதிய டிசைன்களில்,
சாரி வகைகள், பஞ்சாபி வகைகள்,
சிறுவர்களுக்கான ஆடை வகைகள்
மற்றும் அனைத்து கவறிங் நகைகளையும்
பெற்றுக் கொள்ளலாம்
Fester Str.50, 40882 Ratingen
Tel : 021 028 447 44
Mob. : 0173 1937 325
எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 10.00 முதல் மாலை 8.00 வரை திறக்கப்படும்

# ஜோர்ஜிய பதட்டமும் பின்னணியும்

பூமிபுத்திரன்

ரஷ்யாவின் அண்டை நாடான ஜோர்ஜியாவில் அறிமுகம் செய்யப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் நிதிமூலத்தை, விசாரணைக்கு உட்படுத்தும் சட்ட மூலத்தை எதிர்த்து மக்கள் மேற்கொண்ட போராட்டங்களைத் தொடர்ந்து, சட்டம் கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்று இரவுகளே நடைபெற்ற இந்தப் போராட்டம், மேற்குலகில் பெற்ற அதீத கவனம், இந்தப் போராட்டத்தின் பின்னணி யார்? என ஊகிக்கப் போதுமானதாக இருந்தது. போதாதற்கு, ஜோர்ஜிய அரசுத் தலைவரான சலோம் சவுராபிச்விலி, அமெரிக்காவில் இருந்து கொண்டு, இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவாகவும், குறித்த சட்டமூலத்துக்கு எதிராகவும் கருத்து வெளியிட்டிருப்பது, இந்த ஊகத்தை மேலும் நம்பகத்தன்மைக்கு உள்ளாக்குவதாக அமைந்துள்ளது.






மார்ச் 7ஆம் திகதி ஜோர்ஜிய நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலம், 10ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது வாக்கெடுப்பில் தோல்வியைத் தழுவியது. 112 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில், இரண்டாவது வாக்கெடுப்பின் போது, 36 உறுப்பினர்களே பிரசன்னமாக இருந்தனர். இவர்களில் ஒருவர் மாத்திரமே ஆதரவாக வாக்களித்த நிலையில், சட்டமூலம் கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இருபதாம் நூற்றாண்டின் புது வரவான தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வல்லாதிக்க சக்திகளினதும், நவ காலனித்துவ சக்திகளினதும் சதிவலையில் இணைக்கப்பட்டுள்ள கண்ணிகளே என்பது, பெரும்பாலும் நிரூபணமான ஒரு கருத்து. உள்ளூர் தொண்டு நிறுவனங்கள் பெரும்பாலும் மக்கள் பணி ஒன்றையே இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்ற போதிலும், பல சந்தர்ப்பங்களில் அவை, ஆளும் வர்க்கத்தின் அபிலாசைகளை நிறைவேற்றத் துணை போயுள்ளமை வரலாறு. இத்தகையத் தொண்டு நிறுவனங்கள் கூட தமக்கான பெருமளவு நிதியை வெளிநாடுகளிடம் இருந்தே பெற்றுக்கொள்ளும் நிலையில், அவ்வாறு

நிதி வழங்கும் நிறுவனங்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கவும், அவற்றின் தேவைகளை நிறைவு செய்யவும் முயலாது எனக் கூறிவிட முடியாது.

பன்னாட்டுத் தொண்டு நிறுவனங்களைப் பொறுத்தவரை அவை வல்லாதிக்க சக்திகளின் கருத்துகளை மக்கள் மத்தியில் விதைப்பவையாக மாத்திரம் இல்லாமல், அத்தகைய சக்திகளின் அரசியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக உள்ளூர் மக்களைத் தூண்டிச் செயற்பட வைக்கும் வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றன என்பது, வெளிப்படையான குற்றச்சாட்டு. அது மாத்திரமன்றி, ‘தொண்டு நிறுவனக் கலாசாரம்’ எனப் புதுவகையான ஒரு பண்பாட்டை உருவாக்கி, இளைய தலைமுறையினரை ஒருவரோடு ஒருவர் பழக்கச் செய்வதன் மூலம், அவர்கள் தீவிர அரசியலின் பால் ஈர்க்கப்படுவதைத் தடுக்கும் வேலையையும் அவைச் செய்து வருகின்றன.

இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு, சிறிலங்காவில் செயற்பட்டுவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம். 1971இல் இடம்பெற்ற ஜே.வி.பி. கிளர்ச்சியைத் தொடர்ந்து, இளைஞர் மத்தியில் இடம்பெறும் அமைதியின்மையைத் தணிப்பதற்கான வழிவகைகள் தொடர்பில் நிகழ்த்தப்பட்ட ஆய்வின் முடிவில் வெளியிடப்பட்ட பரிந்துரைகளில் ஒன்றாக அமைக்கப்பட்டதே தேசிய இளைஞர் சேவைகள் மன்றம். இஸ்ரேலிய உளவு அமைப்பான மொசாட் வழங்கிய ஆலோசனையின் விளைவாக, இந்த மன்றம் உருவாக்கப்பட்டதாக அப்போது செய்திகள் வெளியாகி இருந்தன. பெரும்பாலும் இந்தக் காலகட்டத்திலேயே சர்வோதயம் உள்ளிட்ட தொண்டு நிறுவனங்கள் சிறிலங்காவில் முளைவிடத் தொடங்கின என்பது நாமறிந்த உண்மை.

தொண்டு நிறுவனங்கள், குறிப்பாக பன்னாட்டுத் தொண்டு நிறுவனங்களுக்கான நிதிமூலம் எங்கிருந்து வருகின்றது? என்பது சுவாரஸ்யமான


அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11


செய்தி. அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகும், பன்னாட்டு வணிக நிறுவனங்களும், ஆயுத உற்பத்தியாளர்களுமே இதன் பின்னணியில் உள்ளனர். ஒரு வணிக நிறுவனம் தனது உற்பத்திப் பொருளை, ஒரு நாட்டில் அறிமுகம் செய்ய விரும்பினால், தொண்டு நிறுவனங்கள் ஊடாகக் குறித்த நாட்டில் அந்த உற்பத்திப் பொருளுக்கான அறிமுகத்தையும், சந்தையையும் உருவாக்கிவிட முடியும். இத்தகைய பணியை மேற்கொள்ள பயிற்சிபெற்ற விற்பன்னர்கள், குறித்த நிறுவனங்களிடமும், தொண்டு நிறுவனங்களிடமும் உள்ளனர். ஆய்வு அறிக்கைகள், புள்ளி விபரங்கள் என்பவற்றைத் தமக்குச் சாதகமாக வெளியிடச் செய்து, தமது நோக்கத்தை அத்தகைய நிறுவனங்கள் நிறைவேற்றிக் கொள்வது ஒன்றும் இரகசியமான செய்தி அல்ல.

‘ஜனநாயகத்தை ஏற்றுமதி செய்தல்’ என்ற மிகக் கிட்டிய நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம், உலகின் பல நாடுகளிலும் தமது முகவர்களை உருவாக்கி, தனது அரசியல் நலன்களை நிறைவேற்றும் வேலைகளில் அமெரிக்கா ஈடுபட்டு வருகின்றமை அறிந்ததே!. இத்தகைய முகவர்கள் எங்கு ஒரு சிறு பொறி கிளம்பினாலும், அதனை ஊதிப் பெரிதாக்கி, பல ‘நிறப் புரட்சிகள்’ நடைபெற வழி சமைத்துத் தருகின்றார்கள்.

2014இல் உக்ரைனில் நடைபெற்ற இத்தகைய ஒரு புரட்சி(?) மூலமே அப்போதைய அரசுத் தலைவர் விக்ரர் யனுக்கோவிச் பதவியில் இருந்து அகற்றப்பட்டார். அமெரிக்காவின் தற்போதைய இணை அரசியல் விவகாரச் செயலாளர், விக்ரோறியா நூலான்ட்

அன்றைய காலகட்டத்தில் தலைநகர் கீவ்வில் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோருக்குக் காலை உணவை நேரடியாகச் சென்று விநியோகம் செய்திருந்தமை பகிரங்கமான செய்தி.

தொண்டு நிறுவனங்கள் அரசியல் சக்திகளின் கருவியாகப் பாவிக்கப்படுவது, இன்று உலகளாவிய ஒரு வழக்கமாக மாறியுள்ள நிலையில், அவற்றைக் கட்டுப்படுத்தும் சட்டங்களை நாடுகள் அறிமுகம் செய்துள்ளன. வெளிநாட்டு முகவர்கள் பதிவுச் சட்டம் அமெரிக்காவில் 1938 முதல் அமுலில் உள்ளது. அதே பாணியிலான சட்டம் பெரும்பாலும் உலகின் அனைத்து நாடுகளிலும் உள்ளது.

ரஸ்யாவில் இதுபோன்ற சட்டம் 2012இல் அறிமுகம் செய்யப்பட்டது. கிட்டத்தட்ட இந்தச் சட்டத்தை அடியொற்றியதாகவே ஜோர்ஜியாவில் புதிய சட்டம் அறிமுகம் செய்யப்படுவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம் சாட்டுகின்றனர்; தமது பங்கீட்டில் 20 விழுக்காட்டுக்கும் அதிகமாக நிதியை, வெளிநாடுகளில் இருந்து பெறும் தொண்டு நிறுவனங்கள், தம்மை அரசாங்கத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும் எனக் குறித்த சட்டம் கோருகின்றது. இவ்வாறு கோருவது மனித உரிமைகளுக்கு எதிரானது, குறிப்பாக ஐரோப்பிய விழுமியங்களுக்கு எதிரானது என்பதே அவர்களின் குற்றச்சாட்டு. அத்தோடு குறித்த சட்டத்தின் பின்னணியில் ரஸ்யா உள்ளது என்பதுவும் துணைக் காரணமாக வைக்கப்பட்டுள்ளது.

அடிப்படை மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அதேநேரம் வெளிநாட்டுச் செல்வாக்கைக் கட்டுப்படுத்துவதில் ஒரு அரசாங்கத்துக்கு உள்ள கரிசனையும், பொறுப்புணர்வும் மதிக்கப்பட வேண்டும்.

வல்லரசுகளின் அரசியல் நிகழ்ச்சி நிரலில், வெகுமக்கள் பகடைக்காய்களாகப் பயன்படுத்தப்படும் போக்கு தொடரவே செய்கிறது. ஒருசில புத்திசாலிகள் மக்களைத் தம்வசம் ஈர்த்து, தமது நோக்கங்களையும், தமது எசமானர்களின் தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்கின்றனர். அப்பாவிகளான மக்கள் அவர்களை நம்பி, அவர்கள் பின்னால் செல்கின்றனர். முறையான அரசியல் விழிப்புணர்வை மக்கள் பெறாமல் இருக்கும்வரை, இத்தகைய போக்கு நீடிப்பதற்கான அறிகுறிகளே உள்ளன.

ஜோர்ஜியாவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள், உக்ரைனில் 2014ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களைப் போன்றதே என ரஸ்யாவின் வெளியுறவு அமைச்சர் லவ்ரோவ் தெரிவித்துள்ளார். அவரது கூற்று முற்றிலும் சரியானதே என்பதைக் கள நிலவரங்கள் உணர்த்தி நிற்கின்றன. 'ரஸ்யாவைச் சூழ்ந்து கொள்ளும்' அமெரிக்காவின் நிகழ்ச்சித் திட்டத்தில் உக்ரைன், ஜோர்ஜியா மற்றும் மோல்டோவா ஆகிய நாடுகளே எஞ்சியுள்ள நிலையில், இதுவொன்றும் ஆச்சரியமான தகவல் அல்ல.

ஜோர்ஜியாவில் தற்போது பதட்டம் ஓரளவு தணிந்திருக்கிறது. ஆனால், அது நிரந்தரமானதல்ல. தனது நோக்கம் நிறைவேறும் வரை அமெரிக்க முயற்சி தொடரவே செய்யும் என்பதே தெளிவான உண்மை.



Grand Opening

# NANDY'S

TAMIL FOODS









Annenstraße 1, 44137 Dortmund
+492317252859
info@nandys-tamilfoods.de
Öffnungszeiten: Mi-Mo 11 Uhr bis 21 Uhr
Dienstag Ruhetag




**மாற்றங்கள் என்பதே மாறாதது என்பது நியதி. இந்த மாற்றம்தான் தமிழீழ விடுதலைப் புலிகளால் 2001ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நடந்து கொண்டிருக்கிறது என்பதே உண்மை. அதனைவிடவும் வேறொன்றுமில்லை என்று ஆறுதலடைவோம்.**

# சின்னத்துக்குள் சிக்கும் தமிழ்த் தேசியம்

**இலட்சுமணன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதுடன் நடைபெற்ற தேர்தல், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னத்துடன் இருந்தது. அடுத்த தேர்தலுக்குள் ஏற்பட்ட குழப்பம் காரணமாக, தந்தை செல்வாவால் 1974களில் கிடப்பில் போடப்பட்ட வீட்டுச் சின்னம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சின்னமானது. ஆனால், சின்னம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் தீர்மானிக்கப் பட்டது என்பது, வெறும் கட்டுக்கதை என்று சொல்ல முடியா விட்டாலும், அன்றைய நிலைமையில் ஒரு சின்னம் தேவை என்பதற்காக மட்டுமே! என்றுதான் சொல்ல வேண்டும். அந்தவகையில், கூட்டமைப்பையே அவர் உருவாக்கினார். சின்னம் தேர்தலுக்காகவே தீர்மானிக்கப் பட்டது.

அன்றைய சூழலில் வீட்டுச் சின்னமாக இருந்தது என்னவோ வாஸ்தவமாக இருந்தாலும், அவருடைய விருப்பு எல்லாம் தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகளின் ஒற்றுமையுடனான பலத்துக்கானதாகவே என்பதனைத் தமிழ்த் தேசியத் தரப்புகள் மறந்துவிட்டன.

தலைவர் காட்டிய சின்னம் வீடுதான் என்கிற விவாதம், பரப்புரை நடந்து கொண்டிருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான அரசியல் கட்சியொன்றின் சின்னத்தின் தேவையைக் கேள்விக்குறியாக்குகின்ற நோக்கத்தில் வெளியேறிய நிலையில், ஏற்படுத்தப் படுவது கூட்டமைப்பை சிதைக்கும் நோக்கம் கொண்ட தமிழரசுக் கட்சிக்கு ஏற்புடையதல்ல என்ற கருத்துகள், இப்போதையச் சூழலில் பரவலாகக் காணப்படுகிறது. இந்த அளவில்தான் வீட்டுச் சின்னம் தலைவர் பிரபாகரனால் நிர்ணயிக்கப்பட்டது அல்லது காட்டப் பட்டது என்ற விவாதம் தேவையற்றதாகி விடுகின்றது.

ஆரம்பத்தில், தமிழர் விடுதலைக் கூட்டணியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிட்டது. பின்னர், இலங்கைத் தமிழரசுக் கட்சியாக தேர்தலில் களமிறங்கியது. இப்போது ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியாக 2023ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலைச் சந்திக்கிறது. கழுதைத் தேயந்து, கட்டெறும்பாகிய கதையாக உதயசூரியன், வீடு இப்போது குத்துவிளக்கு என்றாகி விட்டது என்றே கொள்ள முடிகிறது.

தமிழ்த் தேசிய அரசியலுக்கான ஒரு ஒளியை ஏற்றி வைக்கின்ற முயற்சியில், தமிழ் விடுதலைப் புலிகளின் தலைவர் மேற்கொண்டிருந்தாலும், ஆரம்பத்திலிருந்து கட்சிகள் வெளியேறுவது சாதாரணமாகவே இருந்து வந்திருக்கிறது. முதலில் தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ், பின்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சி என்று பட்டியல்படுத்திக் கொள்ளமுடிகிறது. இது இன்னமும் ஒற்றுமையுடனான பலத்துக்குத் தமிழர்கள் தயாரில்லை என்பதனையே காட்டி நிற்கிறது. இது இலங்கைத் தமிழரசுக்கட்சி சொல்வதைப் போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு தேர்தலுக்கான கூட்டு மாத்திரமே என்பதனைக் கூட ஒப்புவிப்பதாக இருக்கிறது.

இதனை உள்ளே நின்று பார்ப்போமானால், ஒவ்வொரு தேர்தலுக்குப் முன், பின்னரானத் தமிழ் தேசிய அரசியல் சூழ்நிலையானது, தத்தம் கட்சிகளை முன்நிலைப்படுத்துவதாகவே இருந்து வந்திருக்கிறது. ஆசனப் பங்கு பிரிப்பில் பிரச்சினைகளையே ஏற்படுத்தியும் இருக்கிறது. ஒரு வகையில் பார்த்தால் கட்சிகளில் இருப்பவர்கள் தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்காக, எந்த ஒரு சிறு விடயத்தினைக் கூட விட்டுக் கொடுப்பதற்கோ, அனுசரித்துச் செல்வதற்கோ தயாரில்லாதவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தும். தமது தரப்பு நியாயங்களை ஒவ்வொருவரும் பட்டியல்படுத்தி, தங்கள் நிலைபாடுகளை வெளிப்படுத்தினாலும் இதுவே மறைக்க முடியாத உண்மை.

இத்தகைய போக்குகள் தமிழ் தேசிய இருப்பின் சமகால அரசியல் சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்கும், முன்னெடுப்பதற்கும், தற்காத்துக் கொள்வதற்கான ஒரு நிகழ்ச்சி நிரல் அல்ல என்பதனை, யாரும் புரிந்து கொள்வதாக இல்லை.

தமது பலத்தினை நிரூபிக்கின்ற, கோபதாபங்களுக்கு இடங்கொடுக்கின்ற மனோநிலை போன்றவற்றினை வைத்துக் கொண்டு, தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள், தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு எதிர்வினையாக செயற்படும் கட்சிகளிடமும், மக்களிடமும் எவ்வாறு அரசியல் வேலையை செய்யமுடியும்? என்பதே இன்றைய நிலையில் கேள்வியாகும்.

இந்த நிலைமையானது தமிழ் தேசிய அரசியலில் ஒரு ஆரோக்கியமான சூழலாகத் தெரியவில்லை. தமிழரின் அரசியல் விடுதலை குறித்த பயணத்தில் தமிழ் மக்களுக்கான அரசியல் காய் நகர்த்தல்கள் எவ்வாறு






மேற்கொள்ளமுடியும்?. இது மென்மேலும் விமர்சனங்களையும், வீண் தூற்றல்களையுமே ஏற்படுத்தும். சொல்லொணா ஏமாற்றங்களையும், துயரங்களையும் சந்தித்துள்ள தமிழர்களுடைய இனவிடுதலைக்கான அரசியல் வரலாற்றில், காலம் கடந்த ஞானம் வேண்டியதொரு காலகட்டத்தில் நாம் நிற்கிறோம். ஆனால், அதனைக்கூடப் புரிந்து கொள்ளாத வகையில் இலங்கை தமிழரசுக்கட்சி வெளியேறியிருக்கின்றமையானது, அதே போன்றதொரு ஏமாற்றாகவே பார்க்கவேண்டும் என்பது அரசியல்வாதிகளது கருத்தாக இருக்கிறது.

கருத்துகள் எவ்வாறாக வெளியிடப்பட்டாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக் கட்சியாகத் தம்மைக் காட்டிக் கொண்டிருந்த இலங்கைத் தமிழரசுக்கட்சி, தாமாகவே வெளியேறியதாக அதன் ஏனைய பங்காளிக் கட்சிகள் கூறியிருந்தாலும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள், மற்றைய கட்சிகளை மிகவும் காரசாரமாக விமர்சிப்பதை காணமுடிகிறது. இவ்வாறான விமர்சனங்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் மீள இணைவதற்கான வாய்ப்புகளைக் குறைப்பதாகவே அமைந்திருக்கின்றன.

தேர்தல் என்பது விருப்புவாக்கு, தனிப்பட்ட வாக்கு என்ற நிலைமைக்கு அப்பால், தமிழ்த் தேசிய நலனை நோக்கியதாக இருக்க வேண்டும். இருந்தாலும் தமிழ்த் தேசிய அரசியலுக்குள் இருக்கின்ற, அதற்கான அரசியலைச் செய்து வருகின்ற கட்சிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தின் நோக்கத்தினை அறியாதவர்கள் போன்று கருத்துகளை வெளியிடுவதும், செயற்படுவதும் விரிசலையே வலுப்படுத்தும். தமிழரசுக் கட்சியினரது அண்மைய செயற்பாடுகளால், தமிழ்த் தேசிய அரசியலைப் பாதிக்கும் வகையிலான செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் என்று கோரிக்கைகள் வெளிவருகின்றன.

இந்தநிலையில், உள்ளுராட்சித் தேர்லுக்கான வேட்புமனுத்தாக்கல் நிறைவடைந்த சில நாட்களின் பின்னர், ஊடக சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம், “கட்சிகளை ஏளனம் செய்வது, விமர்சனம் செய்வது தந்தை செல்வா வகுத்தக் கொள்கைக்கு முரணானது. நாங்கள் வேறுவேறாக இருந்ததாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பிணைப்பு எங்களுக்குள் இருக்கின்றது என்ற அடிப்படையிலே இந்தத் தேர்தலை முகங்கொடுத்துத் தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்ற எல்லாக் கட்சிகளும் ஒன்றாக இருக்கின்றன என்ற விடயம், தென்னகத்திற்குச் சொல்லப்பட வேண்டும்” எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது நடைபெறுமா? என்று கேட்பதற்கு, முன்னரேயே இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தினைக் கருப்புச் சுதந்திரத் தினமாக அனுஸ்டித்த இலங்கை தமிழரசுக் கட்சி, இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருக்கின்ற ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியைக் காரசாரமாக விமர்சித்துத் தூற்றியிருக்கிறார்கள். இது ஆரோக்கியமான தமிழர் அரசியலுக்கான வழிநடத்தல் கிடையாது என்பதனை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

எது எவ்வாறானாலும், 2020ம் ஆண்டு பொதுத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பாரிய பின்னடைவைச் சந்தித்திருந்தது. 2001ஆம் ஆண்டு முதல் சரிவே காணப்பட்டிருந்தாலும், கடந்த பொதுத் தேர்தல் மிகவும் பாரதூரமானதாகப் பார்க்கப்பட்டது. அதற்கான காரணங்களைத் தேடுவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி தயாரில்லாதிருந்தமையானது அபத்தமானதே!. உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆரம்பம் முதல் இருந்து வந்த கூட்டின் பிளவே அதற்குக் காரணம் என்பதை ஜீரணித்துக் கொள்வதில் என்ன பிரச்சினையிருக்கிறது? என்பது தான் இந்த இடத்தில் முக்கியமான கேள்வி.

இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தனியாக இலங்கைத் தமிழரசுக்கட்சி உள்ளுராட்சித் தேர்தலில் களமிறங்குவது, தமது பலத்தினை நிரூபிப்பதற்கான ஒரு முயற்சியே தவிர, வேறொன்றில்லை. அந்தவகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இப்போதைய குத்துவிளக்குச் சின்னத்துக்குத் தமிழ் மக்கள் வாக்களிப்பார்களா? என்பது தேர்தல் முடிவின் பின்னரே பதிலைத் தரும்.

# DORTMUND மாநகரத்திலே தாயக மரக்கறிகள், பழ வகைகள் மற்றும் உணவுப்பொருட்களை மொத்தமாக பெற்றுக்கொள்ள நாடுங்கள்

StaR-Impex




## Lebensmittel Grosshandel e.K.

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698

email : info@star-impex.de
web : www.star-impex.net

Rabeena — We've Mastered Taste
Aachi — The Mother of Good Taste
BTM
Double Horse — Bringing Health to Life

பொருட்களை ஜேர்மனியில் மொத்தமாக விநியோகம் செய்யும் ஒரே நிறுவனம்

TRS




MDH · Laziza · Cock Brand · DAAWAT · Elephant House · Shan · AKASH BASMATI · Rubicon · Tilda
Nestlé · PG tips · Niru · AROY-D · MTR · AASHIRVAAD · Pillsbury · PATAK'S · Laila

ஆய்வாளர் சேது, அமெரிக்கா

# தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

**பாகம் : 33**

**சென்ற மாத தொடர்ச்சி...**

யூதர்கள் ஈராயிர வருடங்களாக அதிக கல்வியறிவுள்ள சமூகமாக இருந்து வந்துள்ளார்கள். அவர்களின் கற்றலால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, விவசாயத் தொழிலிருந்து விலகி நகர்ப்புற தொழில், வர்த்தகம் சார்ந்த வேலைகளுக்கு மாறிவிட்டார்கள். நாம் இன்று செய்வதை அன்றே செய்து விட்டார்கள். அவர்கள் சமூகத்தில் அதிக கற்றறிந்த அறிஞர்களே அதிக செல்வாக்கு உடையவர்களாக, புகழுடையவர்களாக இருந்து வந்துள்ளனர். இது அவர்கள் சமூகத்தில் ஒரு போட்டி நிலையை உருவாக்கி, அனைவரையும் யூதக் கல்வியில் கற்க வைத்தது. அதுபோக கல்வியற்ற அக்காலத்தில், அவர்களின் கல்விமுறை அவர்களுக்கு அரசுகளில் உயர் பதவிகளையும் பெற்றுத் தந்து, அவர்களை வர்த்தகத்தில் சிறக்க வைத்தது. யூதக் கல்வி அவர்களுக்குள் ஒத்துழைப்பைப் பெருக்கி, மேலும் பயன்பெற வைத்தது. இன்றைய நவீன உலகிலும், அவர்கள் மக்கள் தொகை உலகில் 0.2% ஆக இருந்தாலும், 20% நோபல் பரிசுகளை அவர்களே வென்றுள்ளனர்.

இவ்வாறு அவர்கள் அக்காலத்திலிருந்து, இக்காலம்வரை கல்வி அறிவில் உயர்ந்த சமூகமாகவும், அவர்கள் வாழும் நாடுகளில் அதிக பயனுள்ளவர்களாகவும் முன்னேறியவர்களாகவும் இருந்து வந்திருக்கிறார்கள். யூதனாக இருப்பதை ஒரு பெருமையான விடயமாக அவர்களின் மக்களிடம் கல்வியினூடாகவும், செயலினூடாகவும் உருவாக்கி விட்டனர். அதனால் ஒரு யூதன் தனது அடையாளத்தைப் பெருமையாக நினைத்து, அதை மேலும் தக்கவைக்க உழைக்கிறான்.

அவர்களால் கல்வியில் இவ்வளவு சாதனைகள் புரிந்ததற்கு ஒரு முக்கிய காரணம், அவர்கள் அதிக புத்திசாலிகள் என்பதல்ல. பெரிய சாதனையாளர் ஆவதற்கு 120 மினி இருந்தால் போதுமானது என்கிறது ஆராய்ச்சி முடிவுகள். அவர்களின் சாதனைக்கு ஓர் அடிப்படையான காரணம் என்னவென்றால், அவர்கள் கல்வியைக் கல்விக்காக கற்றார்கள். கற்றலை அகப்படுத்தி அவர்களின் ஒரு தன்மையாகப் பார்க்கிறார்கள். நாம் கல்வியை ஒரு வேலைக்காக, பொருளுக்காக கற்கிறோம். அதனால் நாம் பொருளீட்டிய உடன் கற்றல் நின்று போகிறது. அவர்கள் தொடர்ந்து கற்றுக்கொண்டே இருக்கிறார்கள். அவ்வாறு அவர்களின் குணங்கள் ***(Morals)*** யூதக் கல்விமுறையால் கட்டி அமைக்கப்படுகிறது. யூதக் கல்வியில் நற்குணங்களை உருவாக்குவது, ஒரு முக்கியமான அங்கமாக அவர்கள் செயல்படுகிறார்கள். அவ்வாறு செயல்படுவதற்கு ஏற்றாவாறு அவர்களின் பண்பாட்டையும், வரலாற்று கதையாற்றல்களையும் உருவாக்கி இருக்கிறார்கள் .



## யூதர்களின் கல்விமுறையிலிருந்து தமிழ்க் கல்விக்கான சில உத்திகள்

தமிழ்க்கல்வி இவ்வாறு ஒரு அதிகப்பயன் தரும் கல்வி முறையாக மாற்றப் படவேண்டும். அதற்கேற்றவாறு பண்பாடு மட்டும் வரலாற்றுக் கதையாற்றல் மூலம் நற்குணங்களை வளர்க்கவேண்டும். தமிழ் மட்டும் கற்பிக்காமல், அதனுடன் எது போன்ற தத்துவங்கள், அறிவியல், கணிதம் ஆகியன கற்பிக்கப் படவேண்டும் என்று ஆராயவேண்டும். அவ்வாறு தமிழ்க்கல்வி அதிகப் பயன்பெறும்படி ஆகும்பொழுது, அனைவரும் வலிந்து வந்து படிப்பார்கள், தமிழையும் கற்பார்கள், தமிழர் என்று பெருமிதம் கொள்வார்கள். மேலும் இதுபோன்ற கல்வி ஓர் அறிவார்ந்த ஒத்துழைப்பான சமூகத்தை உருவாக்கி, சமூகத்தை ஓர் உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லும். சமூக மறுசீரமைப்பிற்கானப் பாதையைத் தமிழ்க்கல்வி உருவாக்க வேண்டும்

யூதர்களை அழிக்க பாபிலோனியர்கள், ரோமர்கள், நாசிகள் என்று பலர் வரலாற்றில் தோன்றி இனவழிப்பு செய்துள்ளனர், ஆனால் நடந்தது என்னவோ யூதர்கள் இன்றும் இருக்கிறார்கள், இனவழிப்பு செய்தோர் இன்றில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் அவர்கள் இனவழிப்புகளில் இருந்து கற்று, தங்களை மறுசீரமைப்பு செய்து கொண்டதுதான். பாபிலோனியர்கள் கி.மு. 598-இல் இனவழிப்பு செய்தபோது, யூதர்கள் அவர்களின் வரலாற்று கற்பிதங்களைக் கொண்டு பைபிளை உருவாக்கி, மறு சீரமைத்தனர் . சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர் ரோமர்கள் இஸ்ரேலைப் பிடித்து, இனவழிப்புக்கு உள்ளாக்கி, கோவிலை இரண்டாவது முறையாக கி.பி. 70-இல் உடைத்தார்கள். இம்முறையும் யூதர்கள் தங்களை மாறிய சூழலுக்கு ஏற்ப மாற்றிக் கொண்டார்கள். கோவில்களும், பூசைகளும் தங்களைக் காப்பாற்றாது, முறையான கற்றலின் மூலமே தங்களைக் காக்கமுடியும் என்று மறுசீரமைத்துக் கொண்டனர்.

நாடே இல்லாமல் இரண்டாயிரம் வருடங்களாக வாழ்ந்தாலும், அவர்கள் கற்றல் மூலம் தங்கள் இன அடையாளத்தை இழக்காமல் பாதுகாத்தனர். வரலாற்றுக் கதையாற்றல்கள் உணர்வுப் பூர்வமாக அவர்களை இணைத்து, அவர்களை ஒற்றுமையுடன் வைத்திருந்தது. பின்பு 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் யூத எதிர்ப்பு பரவியபோது, மீண்டும் சீர்திருத்தம்



கொண்டு வந்து, அவர்களின் நாட்டை மீட்டெடுக்க, கல்வியின் மூலம் புதிய தலைமுறையை வளர்த்தெடுத்து வெற்றி கொண்டார்கள்.

ஒவ்வொரு பெரிய சிக்கலையும் எதிர்கொள்ள அவர்கள் கையாண்ட அடிப்படை உத்தி என்பது, கல்வியின் மூலம் உருவாக்கும் சமூக மறுசீரமைப்புதான். இன்று தமிழினமும் இனவழிப்பு, நிலமிழப்பு, அடையாள இழப்பு, சாதிமத பிணக்குகள் எனப்பல சிக்கல்களை எதிர்கொண்டுள்ளது. இதிலிருந்து மீண்டு ஒரு பலமான இனமாக மேலெழுவதற்கு தமிழ்க் கல்வியை ஒரு அடிப்படை உத்தியாகப் பார்க்கவேண்டும். இன்று மக்கள் கோவிலுக்குக் கோடி கோடியாகப் பணத்தை இறைக்கின்றனர். ஆனால், அவர்களின் உண்மையான நலனுக்காக செய்யப்படும் காரியங்களுக்குப் பெரிய உதவி செய்வதில்லை. உதாரணமாக ஆர்வர்டு தமிழ் இருக்கை அமைப்பதற்கு பெரிய பரப்புரை செய்யவேண்டி இருந்தது. கோவிலுக்குச் செல்லும் பணத்தில் ஒரு 10% திருப்பினால் கூட, ஆர்வர்டு போன்று 100 இருக்கைகள் அமைக்கலாம், பல்வேறு முன்னேற்றத் திட்டங்களை முன்னெடுக்கலாம்.

மனிதர்கள் பகுத்தறிந்து, சிந்தித்து இயங்குவதில்லை. பகுத்தறிவு உணர்வுகளுக்கு அடிமை என்கிறது ஆராய்ச்சி முடிவுகள். மனிதனுக்கு முக்கியமானது அனைத்தும் அவன் உணர்வுகளுடன் தொடர்புடையது. முக்கியமானதை இழந்தால் உணர்வுகள் வருத்தமளிக்கும். முக்கியமானத்தைப் பெற்றால் மகிழ்ச்சியளிக்கும். கோவில்கள் அவர்களின் உணர்வுகளை உந்தி, நிதியளிக்க வைக்கிறது. ஆனால் ஆர்வர்டு இருக்கை பெரும்பாலானோர் உணர்வுகளைத் தொடுவதில்லை, அதனால்தான் அவர்கள் நிதியளிப்பதில்லை.

உணர்வுகள் அவர்களுக்கு சிறுவயதில் வரலாற்றுக் கதையாற்றல் மூலம் வந்து சேர்கிறது. அவர்கள் வளர்ந்தபின் அவர்களை மாற்றுவது கடினம். இன்றையத் தேவைக்கேற்ப மக்களின் உணர்வுகளை கதையாற்றல் மூலம் மாற்றி, சமூகத்தை மறுசீரமைப்பது நமது முன்னேற்றத்திற்கு முக்கியமானது. இது உடனடியாக நடப்பதல்ல, ஓரிரு தலைமுறைகள் ஆகும். அதனால் நீண்டகால நோக்கில் செயல்படுவது அவசியம். அதற்கு தமிழ்க்கல்வி அடிப்படை உத்தியாக அமையும்.




# TR Bati

Professionnelm, Fiable, Pileàíheure

நிபுணத்துவம், நம்பகத்தன்மை, குறித்த நேரத்தில்
அனைத்து வீட்டுவேலைகளும் செய்து கொடுக்கப்படும்.



**+33 6 52 46 48 59**
**+33 6 52 60 29 06**

**1 Allée Pierre de Ronsard**
**77200 Torcy**
**France**

www.trbati.fr

- Rénovation — சீரமைப்பு
- Plomberie — தண்ணீர் குழாய் இணைப்பு
- Électricité — மின்சார வேலை
- Charpenterie — தச்சு வேலை
- Carrelage — மார்பிள் பதித்தல்
- Parquet — பலகை பதித்தல்

கல்லெறி வேலுப்பிள்ளை

# "என்ன கொடுமை சரவணா!"



## வணக்கம் பாருங்கோ, எப்பிடி சுகமா இருக்கிறியளே...?

**நான் ஏதோ இருக்கிறன் பாருங்கோ. வாழ்க்கை எண்டாலும் வாழைக்காய் எண்டாலும் முத்தினால் சந்தைக்குப் போய்த்தானே ஆகவேணும். இப்ப வேற ஊசிகளால முத்தவைச்சு சந்தைக்கு அனுப்புறாங்கள் பாருங்கோ. நாளைக்கு எண்டதை நாளைக்கு பாக்கலாம் எண்டு நினைக்காமல் இண்டைக்கே முடிக்கவேண்டிய அவசரமும் கூடிய வாழ்க்கை இது கண்டியளோ. ஏனெண்டால் நாளைக்கு எண்டதே சந்தேகம்தான் பாருங்கோ.**

விசயம் என்னவெண்டா பாருங்கோ; சிங்களவன் எங்கட மண்ணிலே நடத்தின அட்டூழியங்களை எல்லாம் தாங்கமுடியாமல் தான் நாங்கள் வெளிநாடு ஓடிவந்தனாங்கள் பாருங்கோ. அதில சிக்கி உயிரிழந்த எத்தனையோ தமிழர்கள், அந்த மண்ணை மீட்கப் போராடிய போராளிகள் எல்லாருக்கும் ஓர் வரலாறு இருக்குது பாருங்கோ. அதைக் காலம் காலமாக நாங்கள் வரலாறாக நேர்த்தியாக எழுதிப் பேணி வந்தால்தான் அதை அடுத்த தலைமுறைக்கு கடத்த முடியும். ஆனால் எங்கடையள் சிலது வரலாறை குழப்பி அடிச்சு எழுதுறது மட்டுமில்லாமல், வரப்போற தலைமுறைக்கும் தேவையில்லாத கதைகளைச் சொல்லி ஊரைக்குழப்புற வேலையளைச் செய்யுறாங்கள். அதுமட்டுமில்லாமல் எங்கட இனத்தை அழிச்சவங்களையே ஏதோ இனத்தைக் காத்த உத்தமர்கள் போல சித்தரிக்கிற வேலைகளையும் செய்யுறாங்கள்.

இப்ப கிட்டடியில பாருங்கோ இந்தியாவில போய் ஈழத்தமிழர்கள் சிலர் பார்த்த வேலைகளால பலவிதமான குழப்பங்கள் நடக்குது. டெல்லியில போய் ஒரு அம்மணி இருந்துகொண்டு ஆடுற ஆட்டம் சொல்லி வேலையில்லை கண்டியளோ. அது ஒரு பக்கத்தால போகுது. இன்னொரு பக்கத்தால தமிழினம் அழிக்கப்பட்டது தொடர்பாக ஆவணத்தை வெளியிடுகிறோம் எனச் சொல்லிவிட்டு, தகவல்களை நீக்கியும், மாற்றியும், எதிரிகளுக்கு வாழ்த்துப்பாடியும் இன்னொரு ஆட்டம் நடந்து முடிஞ்சிருக்கு கண்டியளோ. அது சொல்லி மாளாத கதை பாருங்கோ.

பிரித்தானியாவிலே இருந்து கெம்பி எழும்பிய தமிழர் ஒருவர், இந்தா வெட்டுறன் பிரட்டுறன் எண்டு தமிழகத்துக்கு போய், இந்தவருச தொடக்கத்தில புத்தகம் ஒண்டை வெளியிட்டார் பாருங்கோ. அதுக்கு முதல் கெம்பி எழும்பிய தமிழர் பார்த்த நரி வேலைகள் சிலவற்றையும் இங்க சொல்லவேண்டி இருக்கு கண்டியளோ. ஏற்கனவே

தமிழினப்படுகொலை தொடர்பாக 2021ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஆவணத்திரட்டை வேறு நபர்கள் மூலமாக வாங்கி, அதை இந்தியாவின் பிறமொழிகளில வெளியிடப்போறம் எண்டு கதையடிச்சு, அதே ஆவணத் திரட்டை தங்கட அமைப்பின்ர பெயரைப் போட்டு வெளியிட்டதுதான் கெம்பி எழும்பிய தமிழர் செய்த முதல் திருட்டு கண்டியளோ.

அதுக்குப்பிறகு அவர் தலைமையில் நடந்த உருட்டல்கள், பிரட்டல்கள் பொரியல்கள், வறுவல்கள் எல்லாம் தனிச் சுவை பாருங்கோ. ஒரு பக்கத்திலயாவது திமுகவின் புகழைப் பாடவேணுமென்பதற்காக அவர் செய்த வேலை பெரும்வேலை கண்டியளோ. 2009 ல முள்ளிவாய்க்காலில இன அழிப்புப் போர் நடந்துகொண்டிருந்த வேளையில, ஐரோப்பாவில் இருந்து சேகரித்த உணவுப் பொருட்களோட போன வணங்காமண் எண்ட கப்பலை சிறிலங்கா அரசாங்கம் அனுமதிக்கவில்லை எண்ட உடன, கருணாநிதியின்ர மகள் எண்டு சொல்லப்படுகிற கனிமொழி அம்மணி தான் உடன தமிழ்நாட்டுல இருந்து பாய்ஞ்சு கப்பலுக்குள்ள இறங்கி, பொருட்களை அள்ளிக் கொண்டுபோய் முள்ளிவாய்க்காலில விசிறியடிச்சதாக ஓர் கதை எழுதப்பட்டிருக்கு பாருங்கோ. இதில கனிமொழியோ கருணாநிதியோ ஏன் நுழைக்கப்பட்டவை எண்டு இதுவரைக்கும் தெரியேல்லை கண்டியளோ.

அதைவிட பாருங்கோ; தலைவரால வழங்கப்பட்ட மாமனிதர் என்ற மதிப்பளிப்பு நீக்கப்பட்டிருக்கு பாருங்கோ. மாமனிதர் தராகி சிவராம் யார் எண்டுறது ஊருக்கே தெரிஞ்சவிசயம். அதில உள்ள மாமனிதர் எண்ட பெயர் ஏன் நீக்கப்பட வேணும்? ஏனெண்டால் அதுக்கும் காரணம் இருக்கு கண்டியளோ. அதைக்கடைசியில சொல்லுறன். சிங்கள இராணுவ வல்லூறுகளால சீரழித்துப் படுகொலை செய்யப்பட்ட தங்கை இசைப்பிரியா புலிகளின் குரல், நிதர்சனம், ஆகிய ஊடகங்களில பணிசெய்தவர் எண்டுறது எல்லாருக்கும் தெரியும். அதை புலிகளின் குரல் எண்டு போடாமல், போராளிக்குழு வின் ஊடகத்தில செய்தி வாசிச்சவர் எண்டு போட்டு வைச்சிருக்கிறதென்ற மர்மம் என்ன எண்டு உங்களுக்கு புரியுதோ சொல்லுங்கோ


17.03.2023 தொடக்கம் வெள்ளிக் கிழமைகளில்....

தமிழ் மொழி 16:00 - 17.45
சிறார்களுக்கும் இளையோர்களுக்கும் எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்
Für Kinder, Und Jugendliche! Auch speziell für Jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen.

கீபோர்ட் 18:00 - 19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது. சிறுவர்களில்இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாம்
Für Kinder, Jugendliche und Erwachsene!

யேர்மன் மொழி 19:15 - 20:15
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும். யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயனுள்ளதாக அமையும்.

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

ICH LERNE DEUTSCH

தமிழர் அரங்கம்
Rheinische Str 76-80,
44137 Dortmund
0151 633 633 33,
0231 950 979 00

பாப்பம்? ஏனெண்டால் புலிநீக்க, நினைவுநீக்க திருவிளையாடல் இதுதான் பாருங்கோ. கருணாநிதி தமிழினத்திற்கு இழைத்த துரோகம் உலகறிந்தது கண்டியளோ. கண்துடைப்பு உண்ணாவிரதம் இருந்து ஒருநாளில இன அழிப்புப் போரை நிறுத்தின ஆள் அவர். அப்படியான திராவிட கைத்தடியை ஈழப்போரை நிறுத்த உழைத்தவர் எண்ட கணக்கில எழுதினா, நீ யார் எண்டு கேக்குறதில என்ன தப்பு இருக்கு கண்டியளோ..? அப்பிடி எண்டால் நீ தமிழனாக இருக்க முடியாது தானே பாருங்கோ.

இதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும் கண்டியளோ. புத்தகத்தை முதல் கொண்டுபோய், கெம்பி எழும்பிய தமிழர் ஆரட்ட எல்லாம் கையளிச்சவர் எண்ட பட்டியலை கேட்டால் தலைசுத்தும் பாருங்கோ. கனிமொழி, ஓசிக வன்னியரசு, மகிந்தாவோட குசலம் கொஞ்சின திருமா, எண்ட வரிசையில இவர் புத்தகம் கொண்டு போய் குடுத்து படம்போட்ட ஆக்கள் எல்லாம் திமுக கைத்தடிகள் தான் பாருங்கோ. இனத்தை அழிக்கத் துணை போனவன், இரட்டைவேடம் போட்டவன், கள்ளன், ஆகிய நபர்கள் தான் கெம்பி எழும்பின தமிழருக்கு கண்ணுக்கு தெரிஞ்சிருக்கு பாருங்கோ. அதுக்கு அவர் சொன்ன விளக்கம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது கண்டியளோ. அந்தப் புத்தகத்தை எதிரிக்கும் கொடுக்க வேண்டியது கடமையாம் பாருங்கோ.

எட குறுக்கால போன கெம்பி எழும்பின தம்பி, உனக்கு கொஞ்சம் கூட அடிப்படை விளக்கம் இல்லையே? இடி அமீன் நடத்தின இனப்படுகொலையில சிக்குண்டு அழிஞ்ச இனத்தில இருந்து வந்த ஒருத்தன், அதே இனப்படு கொலையை ஆவணமாக்கி திருப்பி இடி அமீன் கையில குடுக்குறதால என்னடா லூசுப் பயலே நியாயம் கிடைக்கும்? பொல்பொட் நடத்தின இனப்படுகொலையில் சிக்கி மீண்டு வந்தவன், அந்த இனப்படுகொலையை ஆவணமாக்கி குடுத்தால் நியாயம் கிடைக்குமெண்டு எவனடா

சொன்னது? தமிழினத்தை அழிக்கத் துணைபோன ஒருத்தன், தமிழினத்துக்கு நியாயம் தருவான் எண்டு உனக்குச் சொல்லித்தந்த ஆளை ஒருக்கா காட்டு ராசா? அவரை ஒருக்கா பாக்கவேணும்.

நீர் யாருக்கோ வெள்ளையடிக்குறதுக்காக, உருவாக்கின குப்பைத் தொகுப்புக்கு இனப்படுகொலை எண்டு பெயர் வைச்சதே மாபெரும் இனப்படுகொலை தான். உன்னை மாதிரி ஆக்களால தான் எங்கட இனம் இன்னும் அழிஞ்சுகொண்டே இருக்குது. வெளியில தலைவன் வழியே என்வழி எண்டு புலிக்கொடியை பிடிச்சு ஆட்டுறது. ஆனால் உள்ளால பாக்குற வேலை எல்லாம் நரிக்குச் சாப்பாடு போடுற வேலைதான் கண்டியளோ. உன்ர குடும்பத்தில நாலு பேர் இன அழிப்பில சிக்கிச் செத்திருந்தால் உனக்கு கொஞ்சமாவது மனம் பதைபதைக்கும். இல்லையெண்டால் கூட; எங்கட இனத்தில பிறந்து இவ்வளவு மக்களை அநியாயமாகப் படுகொலை செய்திட்டாங்களே எண்டு நினைச்சாலே, இதுக்கு உடந்தையாக இருந்த எவனையும் மனம் ஏற்றுக் கொள்ளாது. ஆனால் நீ போய் அவங்களுக்கு வெள்ளையடிச்சது மட்டுமில்லாமல், அதைத் தவறெண்டு சுட்டிக்காட்டிய எல்லாரையும் படுகேவலமான வார்த்தைகளால திட்டிக் கொண்டு திரியுறாய் எண்டு கேள்வி.

வரலாறு என்பதற்கு எப்பவும் இயற்கை சாட்சியாக இருக்கும். அதில உருட்டுப் பிரட்டுச் செய்தால் இயற்கையும் மன்னிக்காது, வரலாறும் மன்னிக்காது. இதுக்கு கெம்பி எழும்பின தம்பியும் விதிவிலக்கில்லை கண்டியளோ.

**குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும்**
**குருட்டு உலகமடா - இது**
**கொள்ளையடிப்பதில் வல்லமை காட்டும்**
**திருட்டு உலகமடா - தம்பி**
**தெரிந்து நடந்து கொள்ளடா இதயம்**
**திருந்த மருந்து சொல்லடா**

**- அப்ப வரட்டே**

# தரமான தொழில்நுட்பத்தில்!!!

BOX

**5000+**

மேற்பட்ட திரைப்படங்கள்

**70+**

மேற்பட்ட வானொலிகள்

விளையாட்டு, குறும்படம்,
நம்மவர் நிகழ்வுகள்,
உலகசெய்தி, மேலும் பல...



## Popular Channels

மேலும் பல விளையாட்டு சேனல்கள்...

**Reach Us**

**+00491630007800**

+00447438283284 | +41779579502 | +452657365

+4796689990 | +33605752399 | +31618020014

# உள்ளம்
## திறக்கும் உண்மைகள்



### போலி உறவுகள்

வேடங்கள் போட்டிடும்
வேலையில்லா மனிதர்கள்
வேலியே பயிரை மேய்ந்திடும்
அறிவீரே!
நாடகம் முடிந்ததும்
திரை விலகிடுமே
முகமூடி வாழ்வு
முக்கால் மணிநேரமே

மனிதம் காக்கப்
புனிதம் வேண்டும்
சொல்லும் செயலும்
உண்மையாய் நிகழணும்
பொய்யுரைக்கும் வாழ்வைத்
தூர வீசிடு
நரம்பில்லா நாவுகள்
நயவஞ்சகம் பேசிடும்

துன்பத்தில் சிரிக்கும்
துரோக இதயங்கள்
இன்பம் காண்கையில்
இல்லாதது உரைத்திடுவார்
தன்னலம் நிறைந்த போலி நண்பர்
தவித்திடும் உறவுகள்
தவறிடும்  முகங்கள்


போலியைக் கண்டு
அஞ்சாது பொங்கிடு
ஆசைப்பட்டு போலி
முகமூடியை அணியாதே
காலம் கனிந்திடும்
காட்சிகள் நியமாகும்
கனவு மெய்ப்பட
போலியை துரத்திடு

### சுகம்

அகரம் உரைக்கும்
அளவில்லாத் தமிழே
சிகரம் ஏறவே தீண்டு - பகரும்
வாழ்விலே காணும் மகிழ்வின்
இணைப்பானாய்
சூழ்ந்திடும் நட்பின் சுகம்

### பணம்

பெறுமதி மாறும் பணமே
பொறுத்திரு  உந்தன் ஆட்சி
எங்கே? நித்தம் உன்னை
மாற்றும் கைகள் - நீயோ
பறந்து செல்லும் கடதாசி
மாற்றக் குறையாது
உயர்ந்தே வா




**- ரூபா அன்ரன், சுவிஸ்**

“உள்ளம் திறக்கும் உண்மைகள்...” என்ற தலைப்பில்
உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை
4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

# அகர கவிக்களம்....

## வரம்



அழகான வாழ்க்கை
கடவுள் தந்த வரம்
அதில் கிடைத்த
காதல் வரம்
அன்பு வரம்
தாய்மை வரம்
பிள்ளை வரம்
கிடைத்த வரங்களை வைத்து
சிறப்பாக வாழ்வதும்
மிகச்சிறந்த வரமாகும்

**- நந்தனி, இலண்டன்**

## கைத்தட்டல்களின் போதைக்கான போராட்டம்

எண்ணங்கள் ஏராளமாயிருந்தும்
பேனாவின் மை தீருமுன்னரே
தூக்கியெறியப்படுகிறது
பலரின் இலட்சியக்கனவுகள்.
தவிர்க்கப்பட்ட வாய்ப்புக்களால்
இலட்சியங்களை மலடாக்கும்
இதயங்களால் ஒருபோதும்
சரித்திரம் பிறப்பதில்லை.
பல நகைப்புகளுக்கு
சொந்தக்காரர்கள் நாங்கள்,
ஏக்கங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள்
என்றும் நம்மை தவிர்ப்பதில்லை.
கைதட்டல்களின் போதைக்கான
போராட்டத்தில் நீண்ட மூச்சு
முடியும் வரைக்கும் முயன்று முயன்று
இலக்கை வைத்து
நிறைவு காணும் வரை சுழலுவோம்.

**- நா.மேனன்**

## பாசம்!..

கிழிந்த சேலையில் கட்டிய தூளி
பசியால் பாலகன் அழுகுரல்
அறுந்து விழுந்தது துணியல்ல
அன்னையின் பாச இதயம்!..

## குடும்பம்!..

பூனையும் புலியும் ஒரே குடும்பம்
நாயும் நரியும் ஒரே குடும்பம்
கழுதையும் குதிரையும் ஒரே குடும்பம்
மனிதன் மட்டும் குரங்கா?..
மிருகமா?.. தெரியவில்லையே!..

## மலையிலிருந்து!..

தேயிலைக் கூடையுடன் அம்மா
மலைகளில் ஏறுகையில்
அரை வயிறுப் பசியுடன் – நான்
புத்தகப் பையுடன் மலையிலிருந்து கீழ்!..

## வரிசை!..

வரிசையாக உயர்ந்து நிற்கும்
தெருவிளக்குகள் இன்று இருட்டில்
வரிசையாகச் செல்வோர்
வயது வேறுபாடில்லா விபச்சாரர்கள்!..

## மறு உலகம்!..

போதைவழி சென்ற புருசனை
பாதைமாற்றி அழைத்துவந்து
உணவு பறிமாறுகையில்
பூமி நடுக்கம் இருவரும் மறுஉலகம்!..

**வைரமுத்து சிவராசா,**
**யேர்மனி**




# தமிழ்நாட்டில் திமுக / அதிமுக அரசியலின் அவல உண்மைகள்

ஆய்வாளர் க.ஜெயகாந்த்

தமிழ்நாட்டு அரசியலை சித்தாந்தங்களுடன் அணுகி, பக்கம் பக்கமாகப் பதிவுகள் எழுதுவது கிட்டத்தட்ட நம்மை நாமே ஏமாற்றி கொள்வது போலத்தான். தமிழ்நாட்டு அரசியலின் குறுக்குவெட்டு முகம். தமிழ்நாட்டு அரசியலின் கள யதார்த்தம் என்பது என்ன?

இருபெரும் கட்சிகள் அதிமுக, திமுக. இரு கட்சிகளுமே குறைந்தது தலா ஒரு கோடி உறுப்பினர்களைக் கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். இது துல்லியமான கணக்கு இல்லைதான். ஆனால், அவைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்தது சில மில்லியன்களையாவது கொண்டது என்பது உறுதி.

அடுத்து தமிழ்நாட்டின் மற்றைய கட்சிகள். அவைகள் எண்ணிலடங்காதவை. அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை அவரவர்களின் பலத்திற்கு ஏற்ப வேறுபடும். இங்கே கட்சிகள் என்பது அதிகாரத்துடனும், செல்வத்துடனும் நேரடித் தொடர்பு கொண்டவை. இந்தக் கட்சிகளின் உட்கட்டமைப்பு அடுக்குகளால் ஆனது. இந்த அடுக்குகளைப் பொறுத்து அதிகாரமும், செல்வமும் வேறுபடும். இது மேலிருந்துக் கீழாகக் கோபுர வடிவில் செல்கிறது.

உதாரணத்திற்கு திமுகவை எடுத்து கொள்ளுங்கள். இந்த பிரமிட்டின் உச்ச அடுக்கு கருணாநிதியின் குடும்பம். அதிகாரத்தின் உச்சத்தையும், செல்வம் ஈட்டுவதற்கான வழியை அதிகம் கொண்ட குடும்பம். இந்தக் கருணாநிதியின் குடும்பம் இந்த உச்ச அடுக்கை, இனி வேறு எவருக்கும் விட்டுத் தராது என்பது எழுதப்படாத விதியாகி விட்டது.

**இது திமுகவின் எல்லா உறுப்பினர்களுக்கும் தெரியுமா?**

நன்றாகத் தெரியும். அப்படியானால் ஏன் எந்தவிதத் தார்மீகக் கோபமும் வராமல், தொடர்ந்துக் கடுமையாகக் கட்சிக்காக உழைக்கிறார்கள்? காரணம், இந்தப் பிரமிட்டின் ஏதாவது ஒரு அடுக்கில்



இருந்தாலே செல்வத்தை ஈட்டுவதற்கான வழியும், அதனோடு அதிகாரத்தைச் சுவைப்பதற்கான வழியும் இருக்கிறது.

கருணாநிதி குடும்பத்தின் வாரிசு அரசியலைத் தார்மீகக் கோபத்துடன் கேள்வி கேட்டால், தூக்கி வீசப்படுவார்கள். செல்வத்தை ஈட்டுவதற்கான வழி அடைபடும். அதனால் தங்களின் பலத்திற்கு ஏற்ற அடுக்கிலே இருப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். அவர்களின் முயற்சியெல்லாம், எப்படி தனக்கு மேல் இருக்கும் அடுத்த அடுக்கிற்கு போவது? என்பதாக இருக்கும். மேல் அடுக்கு என்பது அதிக அதிகாரம், அதிக செல்வம்.

கருணாநிதியின் குடும்பத்திற்கு அடுத்த அடுக்கிலே சீனியர் திமுகவினர் வருவார்கள். இதுதான் துரைமுருகன், டி.ஆர்.பாலு, கே.என்.நேரு, இத்யாதி, இத்யாதிகளின் அடுக்கு. இவர்களின் இலக்கு இதே அடுக்கிலே தொடர்ந்து நீடிப்பது. தனது அடுத்தத் தலைமுறையை இந்த அடுக்கிலே கொண்டு அமர்த்துவது. அதே அதிகாரம், அதே செல்வம்.

இப்படியே இந்த அடுக்குகள் கடைக்கோடி உறுப்பினர் வரை செல்லும். இந்தக் கோபுர அடுக்கிலே உள்ள





அனைவருமே அல்லது பெரும்பாலோனோர் பயனாளர்கள்தான். மேல் அடுக்கு அதிக அதிகாரம், அதிக செல்வம். கீழ் அடுக்கு ஒப்பீட்டளவில் குறைவான அதிகாரம், குறைவான செல்வம். கருணாநிதி குடும்பத்தின் அடுக்கு, சீனியர் திமுகவினரின் அடுக்கு என்பது, பல ஆயிரக்கணக்கானக் கோடிகளைச் செல்வமாக ஈட்டிய அடுக்கு. இங்கு திமுக என்பது ஒரு நிறுவனம். பல மில்லியன் உறுப்பினர்களைக் கொண்ட நிறுவனம். அந்த நிறுவனத்திற்குள்ளே உள்ள உறுப்பினர்கள், அடுத்த மேல் அடுக்கிற்குச் செல்வதற்காக அடித்துப் பிடித்து உழைப்பார்கள். காரணம் அனைவரும் பயனாளர்கள்.

இந்த நிறுவனம் தொடர்ந்து இலாபகரமாக இயங்குவதற்கான கருத்தியல் முகமூடிதான் திராவிடம், சமூக நீதி, வெங்காயம், வெள்ளைப்பூடு எல்லாம். இனி



இந்தக் கோபுரத்துக்கு வெளியே உள்ள பயனாளர்கள் பற்றிப் பார்க்கலாம்.

இந்த வெளியே உள்ள பயனாளர்கள்தான் நாம் காணும் அறிவு ஜீவிகள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், முற்போக்காளர்கள், கவிஞர்கள், பட்டிமன்றப் பேச்சாளர்கள், தொழில் முனைவோர்கள், நடிகர்கள் இத்யாதி இத்யாதி. இவர்கள் தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் திராவிட கருத்தியலோடு இணைத்துப் புள்ளி விபரங்களை அள்ளி வீசுவார்கள்.

**இது எல்லாம் அவர்கள் உளப்பூர்வமாக செய்பவைகளா?**

இல்லை. இவர்களும் இதை இலாப, நட்ட கணக்கோடுதான் செய்கிறார்கள். இவர்களுக்குத் தமது துறைகளில், அவரவர் ஏற்றத்திற்கான வழிகளை, செல்வத்தைப் பெருப்பிக்கும் வகைகளை, புதிய பதவிகளை, புதிய வாய்ப்புகளை அடைவதுதான் இலக்கு. இந்த இலக்கை நோக்கிக் காய் நகர்த்துவதற்கு அவர்கள் கொடுக்கும் உழைப்புதான் சகல வளர்ச்சிகளும், திராவிடக் கட்சிகளால் மட்டுமே நிகழ்ந்தது எனக் கம்பிக் கட்டும் கதை சொல்வது எல்லாம். அதை தாம் சார்ந்த துறையிற்கே உரித்தான தொழில் நிபுணத்துவத்தோடு, மக்களிடம் கொண்டு சேர்ப்பார்கள்.

**இந்த அடுக்கை திமுக மட்டும்தானா கொண்டிருக்கிறது?**

இல்லை. இதே இடத்தில் அதிமுகவையும் நீங்கள் பொருத்தலாம். மற்ற சில கட்சிகளையும் பொருத்தலாம். தமிழ்நாட்டை பொறுத்தவரை திமுக, அதிமுக மட்டுமே தொடர்ந்து ஆட்சி, அதிகாரத்தை கைப்பற்றுவதால் இவை இரண்டுக்கும் மேலேயுள்ள பந்தி அதிகமாக பொருந்தும். இதற்கிடையே இந்திய ஒன்றியத்தின் ஒற்றை மயமாக்கலை எதிர்ப்பது, மாநில சுயாட்சி, ஆரியத்தை எதிர்ப்பது போன்ற உருட்டுகள் இதற்குள் அடங்கும்.

நான் கூறிய திமுக, அதிமுக போன்ற நிறுவனமாக இயங்கும் கட்சிகளின் பிரமிட்டுகளின் உயர் அடுக்குகளிலே இருப்பவர்கள், பல ஆயிரம் கோடிச் செல்வத்தை உடையவர்கள். சட்டரீதியாக இத்தனை ஆயிரம் கோடியை உழைப்பதற்கான எந்தப் பின்னணியும் இல்லாமல், ஈட்டிய செல்வம் அது. இவர்களைத்தான் இந்திய ஒன்றியத்தின் பொறிமுறையை வீழ்த்த வந்தவர்கள் என, முகநூலில் உள்ளவர்கள் ரைட்டப் எழுதி கொண்டிருக்கிறார்கள்.

இந்த கட்சிகளிலே உள்ள அரசியல்வாதிகள் தங்களது அரசியல் வாழ்வைத் தொடர்ந்து தக்கவைக்க, அடையாள அரசியலைத் தொடர்ந்து செய்வார்கள். அதற்கான உதாரணங்கள்தான் 'ஆரியத்தை எதிர்க்கும் திராவிடம்', 'மாநில சுயாட்சி' போன்ற சாமானியர்களை ஒன்று திரட்டக் கூடிய கோட்டொலிகள் எல்லாம்.

**எதுவரை இந்திய ஒன்றியத்தின் பொறிமுறையை இந்த அரசியல்வாதிகள் எதிர்ப்பார்கள்?**

எந்தப் புள்ளிவரை தங்களது அதிகாரத்திற்கோ, சேர்த்து வைத்திருக்கும் செல்வத்திற்கோ ஆபத்து வராமல் இருக்கிறதோ, அந்தப் புள்ளிவரை இந்த அரசியல்வாதிகளின் அடையாள அரசியல் எதிர்ப்பு, கோட்டொலியெல்லாம் இருக்கும். அந்தப் புள்ளியைத் தாண்டி இந்த அரசியல்வாதிகளால் செல்ல முடியாது. அந்தப் புள்ளியைத் தாண்டினால், இவர்களின் "டங்குவார்களை" கழற்றும் வித்தை இந்திய ஒன்றிய அரசிற்கு தெரியும்.

ஆக, இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டு தொடர்ந்து இன்னும் பல பத்தாண்டுகளுக்கு நடக்கும். 'இந்தி தெரியாது போடா!' 'பிரஞ்சு தெரியாது போடா!', 'பார்ப்பனிய எதிர்ப்பு' , 'அடைந்தால் திராவிட நாடு இல்லையேல் சுடுகாடு' போன்ற சுடச் சுட வசனங்கள் நம் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

இந்தக் கோபுர அடுக்கில் இருக்கும் பயனாளர்கள் அவர்களின் செல்வத்தையும் சேர்த்து கொண்டேயிருப்பார்கள். அதிகாரத்தையும் சுவைத்து கொண்டேயிருப்பார்கள். இந்திய ஒன்றிய அரசும் அதனது ***Assimilation*** இலக்கை அடைந்து முடித்திருக்கும்.



# CHOLAN

## சோழன் பொருட்களின் விநியோகஸ்தகர்

DORTMUND மாநகரத்திலே தாயக மரக்கறிகள், பழ வகைகள் மற்றும் உணவுப்பொருட்களை மொத்தமாக பெற்றுக் கொள்ள நாடுங்கள்



StaR-Impex



## Lebensmittel Grosshandel e.K.

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698

email : info@star-impex.de
web : www.star-impex.net



# தமிழன் என்றால் எங்கேயும் சிறைதான் வாழ்க்கை

மனோ

தமிழன் என்றால், சர்வதேச அடிமை. ஊதியமே பெற இயலாக் கற்ற சர்வதேச இனங்களின் கொத்தடிமை. அதனால் அவனை ஆங்கிலத்தில் ***PARAIAHS*** -பறையர்கள் எனவும், ***COOLIES*** - கூலிகள் எனவும் ஐரோப்பிய தேசத்து கடல் கொள்ளைக்காரர்களாக உருவாகி, அரசர்களின் முகவர்களாக உருமாறி, ஈற்றில் ஆப்பிரிக்க ஆசிய நாடுகளில் மக்களை மிருகங்களைப் போல வேட்டையாடி, பிற நாடுகளின் செல்வந்தர்களுக்குக் கொத்தடிமைகளாக விற்று வந்த பணத்தில் கோட்டை, கொத்தளங்கள் அமைத்துக் கூலிப் படைகளை உருவாக்கி, ஆசிய ஆப்பிரிக்க நாடுகளை பல நூற்றாண்டுகளாக ஆட்சி நடத்த ஐரோப்பியர்களால் முடிந்தது.

இறுதியில் மனித குலத்தின் சர்வ வல்லமை படைத்த 'ஆண்டவர்களாக' பாராட்டப்படும் வெள்ளைக் காரத் துரை எனவும், இன்று வரை போற்றப்படும் கொள்ளைக்காரர் ஆட்சி செய்யும் பொய்மை உலகில் நாம் வாழ்கிறோம். இந்தக் கொடிய உண்மையை இன்னமும் தமிழ் இனம் அறியாமல், அடிமை சேவகம் செய்தே சுக வாழ்வை இழந்து வாழும் இனமாகத் தமிழ் இனம் மாறி விட்டது. அல்லது மனதளவில் அப்படி மாற்றப்பட்டு விட்டது.

தங்களது சொந்த நாட்டைப் போராடி, அடிமை நிலையிலிருந்து விடுதலை பெற முன் வந்த கூட்டத்தில் முளைத்தது, தன் நாட்டையும், மக்களையும் காட்டிக் கொடுத்தே சுய இலாபம் பெறும் ஒரு தரகர் கூட்டம். சுதந்திர விடுதலைப் போரை வியாபாரப் பண்டமாக, பண்டமாற்று வியாபாரம் செய்து, நாடுகளை ஆளும் குழுவாகத் தம்மை ஆக்கிக் கொண்ட அரசியல் தரகர்களிடம், இந்த நாடுகளின் விடுதலை விலை போனது.

இந்தியாவில் மக்கள் எழுச்சி விடுதலைத் தலைவர்களான சுபாஷ் சந்திர போஸ், வ.உ.சி. போன்ற உத்தமர்களைக் காட்டிக் கொடுக்கும் அரசியல் தலைவர்களாக மகாத்மா என போற்றப்படும் காந்தியும், நேருவும் அரசியல் தரகர்களாக நாட்டின் வளங்களையும், அதிகாரங்களையும் விட்டுக் கொடுத்த 'கட்டுச் சோத்துச் சுதந்திரத்தை' கட்டற்ற சுயாதிக்க இறைமை கொண்ட சுதந்திரம் என, நாட்டு மக்களை நம்ப வைத்தனர்.

வெள்ளைக்கார ஆட்சியாளரின் இடத்தில் அமர்ந்து கொண்ட கொள்ளைக் காரர்கள், அந்த நாட்டுக்குச் சட்டப்படியான சுதந்திரத்தை மறுக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்க விடாமல் சதி செய்து, மத வாத மனு நீதி என்ற பொய்யான பெயரைக் கொண்ட சாதிப் பிரிவுகள், தீண்டாமை போன்ற மனித குலத்துக்கு ஒவ்வாத சட்டங்களை நாட்டின் அரசமைப்புச் சட்டம் ஆக்கினர்.

பலநூறு ஆண்டுகளாக தம் தேசங்களை ஆட்சி செய்த குறு நில மன்னர்களை ஆயுத பலத்தாலும், பணத்தாலும் வென்று உருவாக்கிய தேசம்தான் இந்தியா என்றும் பாரதம் என்றும், அயல் நாடுகளை மிரட்டியும், உலக மன்றங்களில் புரட்டிப் பேசியும், அதிகார அகண்ட பாரதக் கனவு ஆட்சியை நடத்துகிறது அரசியல் தரகர்களின் கூட்டம்.

தனக்கு எந்த வகையிலும் வரலாற்றுத் தொடர்புகளைக் கொண்ட மக்களின்

அயல்நாடுகள் மீது, அகண்ட பாரத தேசம் என்கிற மாயக் கனவை நனவாக்கும் பணியில் அரசியல் தரகர்களிடம் சிக்கி விட்ட இந்திய தேசமும், மக்களும் அயல தேசங்களை ஆக்கிரமிக்க முயல்வதால், அதன் எல்லை நாடுகளும், மக்களும் அதன் அசுரத் தனமான ஆதிக்க வெறியால் *1949* தொடக்கம், அவதிக்கு உள்ளாகித் தவிக்கின்றன. அப்படித்தான் இலங்கைத் தீவும், ஈழத் தமிழர் வாழ்வும் பூமியில் இருந்து முற்றாக அழிக்கப்பட்டு வருகிறது.

இவர்களைப் போன்ற அரசியல் தலைவர்களால், ஈழத் தமிழர்களின் தேச விடுதலைப் போராட்டமும், ஆங்கிலேய ஆட்சியாளர்களின் ஆசைகளைச் செய்து முடிக்கும் ஆங்கில மோகமும், வாழ்க்கை முறைகளுக்கும், ஆங்கிலப் பெண்களையும் மணந்து இனத்தையும், நாட்டையும் விற்கத் துணிந்த தமிழர்கள், ஆங்கில ஆட்சியாளரின் அரசியல் தரகர்களாக மாறினர்.

ஆறுமுக நாவலர் போன்ற உண்மையான மக்கள் தலைவர்களை ஆங்கில அரசும், கத்தோலிக்க மத நிறுவனங்களும், பிரித்தானிய அங்கிலிக்கன் மற்றும் அமெரிக்க மிசனரிகளின் தீவிர மதப் பிரச்சாரத்தால், யாழ் மாணவர் சங்கத்தை உருவாக்கி, போலியான சுதந்திர பிரச்சாரம் தமிழ் இனத்தின் விடுதலைப் போரை ஓரம் கட்டி, இன்று முற்றிலுமாக தமிழ் மக்களின் மனதில் இருந்தும், தமிழ் தேசியத்தின் ஆன்மாவை அழித்து விட்டார்கள்.

சிங்கள தேசத்தின் அரசியல் தலைவர்கள் முற்றிலுமாக ஆரிய பௌத்த சிங்கள நிலையை எடுத்த போதிலும், ஆங்கிலக் கல்வியும், மோகமும் பிடித்தத் தமிழ் அரசியல் தலைவர்களால், தமது மக்களின் அரசியலுக்கு மாற முடியவில்லை என்பதை விட, தமிழ் இன விரோத அரசியலை மேற்கொள்ளும் அரசியல் தரகர்களாகத் தமிழ் இனத்தை விற்கும் தரக அரசியலை *1930*கள் தொடக்கம், இன்று *2023*லும் செய்வதால் தமிழ் இனமும், தமிழர் தாய் நிலமும், பூர்வீகமும் இழந்த இனமாக தமிழ் மக்கள் உலகம் எங்கும் மாற்றப்பட்டு விட்டனர்.

பயங்கரவாதம் எனத் தமிழரின் அரசியல் போராட்டத்தை உலக நாடுகள் பிரகடனப்படுத்த ஓடி ஓடிப் பிரச்சாரம் செய்து, சிங்கள இனவெறி, மதவெறி, கொலை வெறிக் கொண்ட ஆட்சியாளர்களைப் பயங்கவாத அரசு எனப் பிரச்சாரப்படுத்த ஒரு தமிழன் கூட இல்லை.






அதிசயமாய்க் கிடைத்த குமார் பொன்னம்பலம், சந்திரிகா அரசின் போலித் திரையை உலக அரங்கில் அம்பலமாக்கியதால், சிங்களத்தின் தேவைக்காக இன்னொரு தமிழன் கடத்திக் கொலை செய்து, வீதியில் சடலமாய் எறிந்து விட்டுப் போனான். ஏன்? ஏதற்கு? என இன்றுவரை நீதி கேட்க யாரும் இல்லாத நாதியானது அந்தப் பெருமகனின் வாழ்க்கை.

பயங்கரவாதத் தடைச் சட்டம் வரைந்து, சட்டமாக்க உதவியவர் அன்றைய அரச சட்ட மாஅதிபர் சிவா பசுபதி எனப் பெயர் கொண்ட, புகழ் பெற்ற யாழ்ப்பாணத் தமிழ்க் குடும்பத்தில், யாழ் மண்ணின் சோறு, தண்ணீரில் பிறந்து வந்த தமிழர். இன்று உலகின் மிகப் பெரும் கொடூரமான சட்டத்தை வரைந்த பெருமை அவருக்குக் கிடைத்தது. ஆனால், தமிழ் மக்களுக்கு இன அழிப்பு, நிலப் பறிப்பு, உலக அகதிகள், சிறை வாழ்க்கை என்பதைத் தவிர வேறு என்ன கிடைத்தது? இவர்கள் புத்தகப் பூச்சிகளாகப் புத்தகங்களைச் சப்பி விளங்கினார்களே அல்லாமல், பட்டப் படிப்பால் பெற்ற அறிவு என்ன? என யாராலும் சொல்ல முடியுமா?

இவரது வாழ்நாள் சாதனையாகப் பல்லாயிரம் தமிழ் இளைஞர்களும், மக்களும் சிறைகளிலும், சட்டங்களுக்குப் புறம்பாகச் செயற்பட்ட தடுப்பு முகாம்களில் உயிரோடு சித்திரவதைச் செய்து கொன்றதை, நேரடியாக நடத்திய ரணில் விக்கிரமசிங்க இன்று நாட்டின் மக்களால் தெரிவு செய்யப்படாத பெருமைக்குரிய அதி உத்தம ஜனாதிபதி.

எந்தக் குற்றமும் செய்யாத பலர், குற்றமே சாட்டப்படாத சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்ட தமிழ் மக்களின் வாழ்க்கை தடுப்பு முகாம்களிலும், சிறைகளிலும், வெள்ளை வான்களிலும் செத்து மடியக் காரணமானவர்கள் காந்தியவாதிகளாகவும், அகிம்சா மூர்த்திகளாகவும் மக்களின் வரிப்பணத்தில் சுக வாழ்வு வாழ, அவர்களின் தரகு அசியல்தான் காரணம் என்பதை யாரால் மறுக்க முடியும்?.

செய்யாதக் குற்றங்களுக்கு இத்தகைய கால வரையற்ற தண்டனைகளை விட, அரசு போடும் பொது மன்னிப்பு என்கிற பிச்சை வேறு. இதைக் கூட மரணம் விட்டு வைத்தாலும், பயங்கரவாதச் சட்டம் விடுவதாய் இல்லை. பணத்தை இலட்சக் கணக்கில் பேரம் நடத்தும் தமிழ் சட்டத் தரணியும் உண்டு. இருந்தும் கூட தன்மானம், வறுமை காரணத்தால் இன்னமும் எட்டுப் பேரின் ஜனாதிபதி ரணிலின் பொது மன்னிப்பை 25 வருடச் சிறை வாழ்வின் பின்னரும், தமிழனுக்கு எட்டாத கனியாக உள்ளது. தாய் மண்ணில் இந்த நிலை என்றால், எதிரி மண்ணில் நிலை எப்படி இருக்கும்?

தொப்புள் கொடி உறவுகளின் மண் எனப்படும் தமிழக மண்ணில், 1983லும் அதன் பின்னரும் வலிந்து, தனது கப்பல்களில் அரசியல் தஞ்சம் கொடுப்பதாக இலங்கையில் இருந்து கூட்டிச் சென்ற இலங்கைத் தமிழ் அகதிகள் 40 வருடங்களாகியும் சிறைகளிலும், சிறப்பு தடை முகாம்களிலும் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர். அகதிகளுக்கான சர்வதேச சட்ட விதிகளின் படியான குடி உரிமைகளோ, சலுகைகளோ வழங்கப்படாத கொத்தடிமைகளாக பல தலைமுறை, தமிழர்கள் வேறு நாடுகளுக்குப் போகவோ, தமது நாட்டுக்கும் திரும்ப முடியாத திரிசங்கு சொர்க்கத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கிறார்கள்.

அப்பாப் பிள்ளை அமிர்த லிங்கமும், திருமதி மங்கையர்க் கரசியும், சம்பந்தன் உட்பட



பல தலைவர்கள் இந்திய அரசின் கௌரவ விருந்தாளிகளாகப் பெரு வாழ்வு வாழ்ந்து, மறைந்தும் விட்டார்கள். தந்தை செல்வாவின் தவப் புதல்வன் சந்திரகாசன், தமிழ் அகதிகள் அமைப்பின் தலைவராக எல்லா வசதிகளுடன் வாழ்ந்து விட்டு, நாடும் திரும்பி விட்டார். ஆயினும் இந்திய மண்ணில் தமிழ் ஈழ அகதிகளின் அவல வாழ்க்கை, பலர் சாகும் வரை உண்ணா விரதங்கள், தற்கொலை முயற்சிகளை எத்தனித்தும், எந்தவித பயனும் கிடைக்காமல் விழலுக்கு இறைத்த நீராக அவர்களின் வாழ்க்கை அழிந்து போகிறது.

இந்த நிலையில் உலகத் தமிழர் பேரவைத் தலைவர் பழ.நெடுமாறன், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரும், அழிக்கப்பட்ட தமிழீழ அரசின் தலைவர் மேதகு. தலைவர் வே. பிரபாகரனும், மனைவி மதிவதனி, மகள் துவாரகாவுடனும் எங்கோ நலமாய் இருக்கிறாராம். விரைவில் வெளிவந்து, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைத் தரப்போகிறார் என்று ஊடக அறிவித்தல் மூலம் சொல்லி வருகிறார். அவருக்கு ஜால்ரா அடித்து, பக்கப் பாட்டுப் பாடுகிறார் புரட்சிக் கவிஞர் காசி.ஆனந்தன்.

இலங்கைத் தமிழர் நிரந்தர அடிமை அகதிகளாகத் தமது நிலங்களில் இந்திய-இலங்கை அரசுகளின் உளவுப் மற்றும் இராணுவத்தாலும், சிறைக் கைதிகளை விட மோசமான வாழ்க்கையில் அவதிப்படுகிறார்கள்.



இன்னும் அறியப்படாத உலக நாடுகளில், அகதித் தஞ்சம் மறுக்கப்பட்டு, சிறைகளில் செத்து மடிகிறார்கள்.

ஆனாலும் தேர்தல்களும், வாக்களிப்புகளும் நடத்தப்படுகின்றன. மக்கள் பிரதிநிதிகளும், தமிழ் மக்களின் தலைவர்களாகப் பணம், பதவி, மக்கள் வரிப் பணத்தில் கார்கள், வீடுகள் வசதி நிறைந்த வாழ்வும் வாழ்கிறார்கள். வாக்களித்து, வாழ்வளித்த மக்கள் வாழும் உலகம் வேறு. வாக்குப் பெற்று அதனால் வசதியும், பதவியும், வாழ்வும் பெற்றவர்கள் வாழும் உலகம் வேறு. ஓரின மக்கள், இரு வேறு உலகத்தில். இதுதான் ஈழத் தமிழரின் இன்றைய நிலை. இந்த விதியை அழித்துப் புதிய விதி சமைக்க எழுந்த தலைவன் பிரபாகரனின் விதியை, மாற்றி எழுதியக் கூட்டம் கொக்கரிக்கிறது. ஏற்றி விட்ட ஏணிப் படிகளான மக்கள் கூட்டம், ஏமாளிகளாக புழுதியில் அழுந்திச் சாகிறது.


ஒருவேளை நெடுமாறனின் தீர்க்க தரிசனம் பலிக்காதா? தமிழினம் இன்பக் குளியலில் களிக்காதா? என்கிற நப்பாசை உயிரைக் கையில் பிடித்தபடி வாழ வைக்கிறது.






ஆர்.பாரதி

# வசந்த முதலிகேயின் அதிரடி யாழ் விஜயம்



வசந்த முதலிகே! கொழும்பில் ராஜபக்ஷக்களுக்கு எதிராக வெடித்த போராட்டத்தின் பின்னர், சிங்கள மக்கள் மத்தியில் பிரபலமான பெயர் இது. குறிப்பாக சிங்கள மாணவர்களின் தலைவராக இவர் தன்னை வரிந்து கொண்டமையால், சிங்கள இளைஞர்களின் மத்தியில் இவருக்குத் தனியான ஒரு செல்வாக்கு உள்ளது.

அரசுக்கு எதிரான போராட்டத்தை தென்னிலங்கையில் முன்னெடுக்கும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் தலைவர்தான் இந்த வசந்த முதலிகே.

பல சந்தர்ப்பங்களில் கைதாகி, பிணையில் விடுதலையாகியிருப்பவர். போராட்டங்கள் நடைபெறும் சந்தர்ப்பங்களில் பொலிஸார் இவர் மீது தடை உத்தரவைப் பெற்றுவிடுவதும், இவர் தடையைத் தாண்டி ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கும் போது கைதாவதும், இலங்கையில் இன்று வழமையான ஒரு செய்திதான்.

தென்னிலங்கை இளைஞர்கள் மத்தியில் இவர் ஒரு ஹீரோ! ஆனால், அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இவர் வில்லன்!! இந்த வசந்த முதலிகே சில தினங்களுக்கு முன்னர், தனது சகாக்கள் சிலரையும் அழைத்துக்கொண்டு யாழ்ப்பாணத்துக்கான திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இந்த அவசர விஜயமும், யாழ்ப்பாணத்தில் அவர் நடத்திய பேச்சுவார்த்தைகளும் இலங்கை ஊடகங்களில் பரபரப்புச் செய்தியாக வெளிவந்திருந்தது.

தமிழ்ப் பத்திரிகைகள் இவரது விஜயம், அவர் யாழில் நடத்திய பேச்சுக்கள் குறித்து செய்திகளைப் பரபரப்பாக வெளியிட்ட அதேவேளையில், சிங்களப் பத்திரிகைகள் இது தொடர்பான செய்திகளைப் பெருமளவுக்கு இருட்டடிப்பு செய்துவிட்டன.

தென்னிலங்கை போராட்டங்களால் கொதித்துக் கொண்டிருக்கும் நிலையில், அவர் எதற்காக யாழ்ப்பாணம் வந்தார்?

அரசுக்கு எதிரான போராட்டங்கள் தென்னிலங்கையில் இப்போது மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கின்றது. வசந்த முதலிகே தலைமையிலான அனைத்து பல்கலைக்கழக மாணவர் அமைப்பு, இந்தப் போராட்டங்களில் ஒரு முக்கிய பங்களிப்பை வழங்கி வருகின்றது. கோட்டபாயாவுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்த அவர்கள், இப்போது ரணிலுக்கு எதிராக இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றார்கள்.

ஆனால், கோட்டபாயாவுக்கு எதிரான போராட்டத்தில் காணப்பட்ட வேகம், அதில் கலந்துகொண்டவர்களின் தொகை என்பனவற்றை இப்போது காணமுடியவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று - போராட்டத்தை

ஒடுக்குவதற்கு ரணில் கையாண்ட உபாயங்கள். தலைமை தாங்கிய பலர் கைதானமையும், அவர்கள் மீதான தடைகள் - வழக்குகள் என்பன பலரை இந்தப் போராட்டத்திலிருந்து ஒதுங்கிப்போகச் செய்துவிட்டது. ஆனால், இந்த அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தாக்குப் பிடிக்கும் ஒருவராக இருப்பவர்தான் வசந்த முதலிகே.

போராட்டங்கள் பலவீனமடைய இரண்டாவது காரணம். கோட்டாபயவின் ஆட்சிக்காலத்தில் காணப்பட்டது போல - எரிபொருள், எரிவாய்வுக்கான வரிசைகள் இப்போது இல்லை. அவற்றுக்குத் தட்டுப்பாடும் இல்லை. அதனால், இயல்புநிலை ஓரளவுக்கு உருவாகிவிட்டது போன்ற ஒரு நிலை காணப்படுகின்றது. மக்கள் வீதிக்கு இறங்காமைக்கு இது ஒரு காரணம்.

இந்த நிலையில் ரணிலுக்கு எதிராக போராட்டத்தை முன்னெடுப்பவர்களின் கைகளில் இரண்டு பிரதான காரணங்கள்தான் உள்ளன. ஒன்று - உச்சத்துக்கு சென்றுள்ள விலைவாசி. முக்கியமாக மின்சாரக் கட்டணம் பல மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. இரண்டாவது, அதிகரித்த வருமான வரி. இந்த இரண்டும் சர்வதேச நாணய நிதியத்தைத் திருப்திப்படுத்துவதற்காகச் செய்யப்பட்டவைதான். அதிகரித்த வருமான வரியால், தாம் வழமையாகப் பெறும் வருமானத்தில் கணிசமான தொகையை மக்கள் இழக்கின்றார்கள். அதேவேளையில், செலவீனங்கள் பல மடங்கு அதிகரித்திருக்கின்றது. பொருட்கள் சேவைகளுக்கான வரிகள் அதிகரிக்கப்பட்டமையும் இந்த செலவீன அதிகரிப்புக்குக் காரணம். இன்று போராட்டம் நடத்துபவர்கள் இவற்றைத்தான் கைகளில் தூக்கியுள்ளார்கள்.

இந்தப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை கைகளில் எடுக்கின்றது. தென்னிலங்கைப் போராட்டகாரர்களுக்கு இதுதான் பிரச்சினையைக் கொடுக்கின்றது. இப்போது பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு எதிரான போராட்டத்துக்குச் சிறுபான்மை மக்களையும் இணைக்காவிட்டால், சர்வதேச அரங்கில் அது கவனத்தைப் பெறாது, அவ்வாறான போராட்டம் பலமானதாகவும் இருக்காது என்ற நிலையில்தான், வசந்த முதலிகே தலைமையிலான குழுவினர் அவசரமாக யாழ்ப்பாணம் வந்தார்கள்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் என வசந்த முதலிகே சொல்லப்பட்டாலும், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா பல்கலைக் கழகங்களை அவர்களால் அதற்குள் இணைக்க முடியவில்லை. அவர்களது போராட்டத்துக்கு அது பலவீனமாகவே இருந்தது. அதனால், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தையும் இதற்குள் இணைக்க வேண்டும் என்ற இலக்குடன்தான் அவர்கள் யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்டார்கள்.

பயங்கரவாதத் தடை சட்டம் என்பதே தமிழருக்கு எதிராக 1979இல் உருவாகியது. மிகவும் மோசமானது என வர்ணிக்கப்படும் இதற்கு எதிராக தமிழர்கள் ஐ.நா. வரையில் சென்று குரல்கொடுத்திருக்கின்றார்கள். இதனால், தமிழர்கள் பலர் கொல்லப் பட்டிருக்கின்றார்கள். காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இன்னும் பலர் சிறையில் வாடுகின்றார்கள்.

கடந்த 44 வருடங்களாக தமிழர், தமிழ் கட்சிகள், தமிழ் மாணவர்கள், தமிழ், இளைஞர்கள், தமிழ் தாய்மார்கள் இதற்கு எதிராகப் போராடும்போது, வராதிருந்து விட்டு, இப்போது அந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் வசந்த முதலிகே போன்றவர்களையும் பதம் பார்க்கும் போதுதான், திடீரென யாழ்ப்பாணத்துக்கு வந்து "பயங்கரவாதத் தடைச் சட்டத்தை எதிர்க்க, யாழ் பல்கலையும் இணைய வேண்டும்" என அவர்கள் கோரியிருக்கின்றார்.

இதற்கு "இணைகிறோம், ஆனால், எமது பிரச்சினைகளையும் உள்வாங்குங்கள்" என யாழ் பல்கலை மாணவர் ஒன்றியம் தடாலடியாகப் பதிலளித்திருக்கின்றது. தமது இளமைக் காலத்தைத் தொலைத்துவிட்டு, ஒரு இரு தசாப்த காலத்தையும் தாண்டி பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் சிறையில் வாடும் தமிழர்களை மறந்துவிட்டு, வசந்த முதலிகே மீது பயங்கரவாதத் தடைச்சட்டம் பாய்கின்றது என்பதற்காக மட்டும் தமிழ் மாணவர்களும் தம்முடன் இணைய வேண்டும் என்பதுதான் அவர்கள் தேவை.

இன்றுகூட சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களுக்காகக் குரல் கொடுக்க இந்த அரகலய கிளர்ச்சியாளர்கள் தயாராகவில்லை!

# 1830இல் பறித்த தமிழர் தேசமே வேண்டும்

அன்புச் செல்வன்

இது வரை காலமும் கடந்த *10* ஆண்டுகளாக தனித் தமிழ் ஈழ நாட்டுக் கோரிக்கையை, ஈழத் தமிழ் மக்கள் முள்ளி வாய்க்கால் தமிழ் இன அழிப்புப் போரால் கைவிட்டு விட்டார்கள் என, இலங்கையின் ஆரிய பௌத்த சிங்களப் பேரினவாதிகளும், இந்திய ஆரிய இந்துத்தவ பா.ஜ.க. இந்திய திகமும் தமிழ் இனவிரோதிகளின் திராவிடக் கட்சிகளும், ஈழத் தமிழ் மக்களின் தமிழ்த் தேசியம் சார்ந்த வரலாற்றை மீளுருவாக்கம் செய்யத் தனித் தமிழ் ஈழக் கோரிக்கையை முன்னிறுத்தி, *1947* தொடக்கம், தமது அரசியல் போராட்டங்களை மகாத்மா காந்தியின் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈழ மக்கள் தம்மையும் இணைத்து, தமக்கான தாய் மண் மீட்புப் போரை ஆங்கிலேய அரசுக்கு எதிராக இணைத்துக் கொண்டனர்.

## தனித் தமிழ் ஈழம்தான் வேண்டும்

ஈழத் தமிழரின் தன்மான அரசியலை யாழ்ப்பாணம் நல்லை நகர் ஆறுமுக நாவலர் *1850*களில் தமிழர் தமிழ் சைவம் என்கிற மும்முளைகளிலும் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் காட்டிய தமிழ் இன வெறுப்பு அல்லது பிரித்தானிய அரசின் ஆதிக்க அரசியலை எதிர்த்து, தமிழ் மொழி, தமிழ் இனம், சைவ மதம் என்பவற்றைப் பாதுகாக்கும் தமிழத் தேசிய எழுச்சி அரசியலை ஈழ மண்ணில் நிலை நாட்ட முற்பட்டார். பிரித்தானிய ஆட்சியாளர்கள் மேற்கொண்ட தமிழர் இன அடக்கு முறை ஆட்சி, ஆரிய சிங்கள பௌத்த இனவெறி அரசியலுக்கு ஆதரவான ஆட்சியாகத் தமிழ் மக்கள் மீது திணிக்க முயன்றது.

இதனை அன்றைய யாழ்ப்பாண கத்தோலிக்கப் பாதிரியார் பெர்சிவலின் நட்பில் வளர்ந்த ஆறுமுக நாவலர், சரியாக உரிய காலத்தில் அடையாளம் கண்டு, தமது எதிர் வினை அரசியலாக தமிழர் இனம், தமிழ் மொழி, தமிழரின் சைவ மதம் என்பவற்றை ஆங்கிலேய ஆட்சியாளரும், ஆரிய சிங்கள பௌத்த இன மேலாதிக்க அரசியல்வாதிகளும் ஓரணியில் இணைந்து, தமிழ் இனத்தை அடக்கி ஆளமுற்படுவதை நாவலர் அவர்கள் மிக எளிதாகப் புரிந்து கொள்ள, பெர்சிவல் பாதிரியாருடன் அவர் கொண்ட நட்பு உதவியது.

பெர்சிவல் ***(Father Percival)*** பாதிரியாரின் வேண்டுதல் படி, பைபிள் நூலைத் தூயத் தமிழில் மொழி மாற்றம் செய்த நாவலர், சைவ வெறியர் என அறிவுள்ள யாரும் சொல்ல மாட்டார்கள். ஆனால், அன்றைய கத்தோலிக்க மதப் பிரச்சாரகர்கள் தமது மதத்தைப் பரப்புவதற்காகக் கத்தோலிக்க மதத்தின் சிறப்புகளைப் பிரச்சாரப்படுத்தி, மக்களைக் கவரும் மதமாற்றத்தைச் செய்யாமல், சைவ மதத்தைத் தூஷித்து, இன்று போல் அன்றும் சைவர்களின் புனித திரு உருவங்களைப் பேய்கள், பிசாசுகள் என்றும், தமிழர்கள் அவற்றை வணங்குவதால் காட்டு மிராண்டிகள் என, இன்னும் பல அவதூறுகளைப் பிரச்சாரப்படுத்தினர்.

தமது கத்தோலிக்க மதப் பிரச்சாரத்தை 'உதய தாரகை' எனத் தமிழிலும், 'மோர்னிங் ஸ்ரார்' ***'MORNING STAR'*** என ஆங்கிலத்திலும், யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக அச்சகத்தைத் தொடங்கி தமிழருக்கும், தமிழ் மொழிக்கும், தமிழர் கலாசாரத்துக்கும் மிகப் பெரும் சீரழிவை யாழ் கத்தோலிகத் திருச்சபையும், ஆங்கிலேயரின் பிரித்தானியரின் அங்கிலிக்கன் திருச் சபையும், வட்டுக் கோட்டை கல்லூரியின் அமெரிக்கரின் கத்தோலிக்க மிசனரி ***AMERICAN MISSIONERY'***



மார்களும் ஏற்படுத்திய தமிழர் வெறுப்பு அடக்குமுறை ஏற்படுத்திய நிலையில், காலத்தின் கட்டாயமாக நாவலரின் சைவம், தமிழ், தமிழரின் அரசியல் உரிமை பற்றிய பொதுநலத் தொண்டு தமிழ் மக்கள் மத்தியில் அவசரத் தேவையாக தோற்றம் பெற்றன.

நாவலரது பொது நலத் தொண்டு, அன்றைய யாழ் வடமாகாண அரசாங்க அதிபர் ஆங்கிலேயரான துவைணம் ***(TWYNAM G.A., JAFFNA)*** அவர்களின் செயற்பாடுகளும், நாவலரின் கடும் எதிர்ப்புக்கு உள்ளானது. முடிவில் ஆங்கிலேய ஆட்சியரால் அவரை, இடம் மாற்றம் செய்யும் அளவுக்கு நாவலர் அவர்களின் பொது நலச் சேவை இருந்தது. தமிழ் மக்களின் தார்மீக உரிமைகளை நாவலர் பெருமான் நிலைநாட்டுவதில் வெற்றியும் பெற்றார்.

அவரது போராட்டம், அரச சேவையில் தமிழர் திட்டமிட்டுப் புறக்கணிக்கப் பட்டதையும், யாழ்ப்பாணத்துக்கு மாநகரச் சபை அந்தஸ்தை வழங்காமல் கண்டிக்கும், காலிக்கும் முக்கியம் கொடுத்த அரசையும் கண்டிக்க அவர் தவறவில்லை. யாழில் பஞ்ச காலத்தில் பசித்தவருக்கு இலவசமாகக் கஞ்சி வழங்கும் கஞ்சித் தொட்டிகளை நிறுவி, மக்களைக் காப்பாற்ற தமது செல்வங்களையும், பிற செல்வந்தர்களின் கொடைகளைப் பெற்றும் நடத்தினார்.

வெள்ளிக் கிழமை மாலை நேரங்களில் வண்ணை என இன்று அழைக்கப் படும் வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலில், சைவ சமயப் பிரச்சாரத்தையும், கத்தோலிக்க நிறுவனங்களின் சைவமத இழிவுப் பிரச்சாரங்களுக்கு, சைவமத நூல்களின் அறிவையும் போதித்து, சைவ சமயம் முற்றாக அழிந்து போய் விடாமல் போராடினார்.

இவரது பிரச்சாரங்கள் தமிழ் தேசியமாக உருவெடுத்து விடக் கூடாது என்பதற்காகவே, வட்டுக் கோட்டைக் கல்லூரியில் தோற்றுவிக்கப் பட்டது போன்றே பின்னால் கருதப்படும் அளவுக்கு, யாழ்பாண வாலிபர் சங்கம் தமிழரின் அரசியல் வாழ்வில் தோற்றம் பெற்றது.

தொடக்கத்தில் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் இணைந்து செயலாற்றியது போல, அதன் நடவடிக்கைகள் மகாத்மா காந்தி, வல்லபாய் பட்டேல் போன்றவர்களை யாழ் மண்ணில் வரவேற்று, யாழ் மக்களில் தங்க நகைகள், பணங்களை வழங்கியதோடு, வாலிபர் சங்கத்தின் தமிழரின் அரசியல் போராட்டம் 1931 தேர்தல் பகிஷ்கரிப்பைச் செய்து, தனது தமிழ் மக்களுக்கான அரசியலை மடைமாற்றி மழுங்கச் செய்தது. அதன் அரசியல் பயணமும், நோக்கமும் ஆறுமுக நாவலர் அவர்களால் உருவான தமிழ் தேசிய எழுச்சி கத்தோலிக்க மதவாதிகளுக்கும், ஆங்கிலேய சிங்கள அரசுகளின் அரசியலைக் கட்டிக் காப்பதற்குமான மக்கள் எழுச்சியை அழிப்பதாகவே 1920களில் இருந்துள்ளது.

இதே நிலைதான் 1947 சுதந்திர இலங்கையின் அரசியலில் டி.எஸ். சேனா நாயக்காவும், ஏனைய சிங்கள அரசியல் தலைவர்களையும் சிறையிலிருந்து விடுதலை பெற்றுக் கொடுத்த சேர்.பொன் இராமநாதன் ஒரு



தமிழர் என்பதை மறந்து, தமிழ் இனத்தை அழிக்கும் அரசியலை கல்ஓயாவில் சிங்களக் குடியேற்றங்களைத் தொடங்கி, இன்று காங்கேசன் துறைக் கடல் எல்லை வரை தமிழரின் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் வளங்கள் எல்லாம் புத்த கோயில்களும், சிங்களக் குடியேற்றங்களும், தமிழ் இனத்தை சிங்களம் முழுவதுமாக அழித்து விட்டது என்றே சொல்ல வேண்டும்.

தமிழன் என்ற இனமோ, மொழியோ, தனியான தாய் நிலமோ இருக்கக் கூடாது என்பதை இலங்கையில் சிங்களம் ஆயுத பலத்தால் சாதித்து விட்டது. நாவலர் வாழ்ந்த யாழ் மண்ணில், இன்று ஆரிய சிங்கள பௌத்தத்துடன், இந்திய ஆரிய இந்துத்துவ பாரதிய ஜனதா இணைந்த அரசியலைத்தான் காண முடிகிறது.

இந்தியாவிலும், இலங்கையிலும் எந்த அரசியல் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், தமிழ் மக்களை அழித்து, ஒழிக்கும் அரசுகளாகவே அந்த நாடுகள் பிரித்தானிய ஆட்சியாளரிடம் சுதந்திரம் பெற்ற 1948 தொடக்கம் இருந்து வருகின்றன என்கிற உண்மையைத் தெரிந்து கொள்ள, எவருக்கும் ஏவுகணை விஞ்ஞான அறிவு தேவைப்படாது. ஆனால், இரு நாடுகளின் அரசியல்வாதிகளில் காணப்படும் பொதுவான ஒற்றுமை என்ன வென்றால், இலஞ்சம், ஊழல் நிறைந்த முறையான கல்வி அறிவைக் கொண்டிராத காடைத்தனம் ஒன்றுதான். அதனால் நாட்டு நலம், நாட்டு மக்கள் நலம் கருதாத பணக் கொள்ளையரின் ஆட்சிகள், உலக அளவில் பதவியில் உள்ளன என்பதை, 2009 முள்ளிவாய்க்கால் தமிழ் இனப் படுகொலைகள் உறுதிப் படுத்துகின்றன.

இலங்கையில் ஓரளவு நீதியும், நியாயமும் எல்லா இன மத மக்களுக்கும் கிடைக்கும் வகையில் சட்டம், நீதி பாதுகாப்பை உத்தரவாதம் வழங்கும் விதிகள், உபவிதிகளைக் கொண்டிருந்த சோல்பரி பிரபு அரசமைப்புச் சட்டம், ஏட்டுச் சுரைக்காயாக அது நிறைவேறிய அடுத்த ஆண்டே, 1948இல் தேசபிதா, சுதந்திர இலங்கையின் முதல் பிரதமர் என இன்றும் உலகில் பேசப்படும் டொன் ஸ்ரீபன் சேனாநாயக்க 10 இலட்சம் மலையக தமிழ் வாக்காளர்கள், 1947 தேர்தலில் தமது கட்சிக்கு வாக்களிக்காமல், இடது சாரிக் கட்சிகளை வெற்றி பெற வைத்தனர் என்கிற காரணத்தால், அவர்களின் ஜனநாயக அடிப்படையான இலங்கைக் குடிஉரிமையைப் பறித்து, நாடற்ற மக்களாக்கி, ஜனநாயகப் படுகொலை செய்தார்.

அதன் பின்னர் 1956இல் ஆட்சி அமைத்த சொலமன் றிட்ஜ்வே பண்டாரநாயக்க, தனிச் சிங்களச் சட்டம் மற்ற சிறுபான்மை இன மத மக்களை நாட்டை விட்டு வெளியேற்றி, தனிச் சிங்கள ஆட்சி எனும் ‘அப்பே ஆண்டுவ’ என்கிற தனிச் சிங்கள புத்தமத அரசியலைத் தொடக்கி வைத்தார். இதனால் தமிழ் மக்கள் அரச பயங்கரவாத தாக்குதலுக்கு முதல் முறையாக உயிர், உடைமைகளைச் சிங்களவரால் கொள்ளை, கொலைகள் மூலம் இழக்க தொடங்கினர்.

அன்று தொடங்கிய சிங்கள இனவெறி ஆட்சி, 2009 முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படு கொலைகள் பலவற்றையும் கடந்து, சிங்கள இராணுவ ஆட்சி, தமிழர் நிலப்பறிப்பு, மத வழிபாட்டுத் தலங்கள் அழிப்பும் அவற்றில் சிங்கள இராணுவப் புத்த கோயில்கள், புத்த மத பிக்குகள் பள்ளிகள், சிங்கள மக்கள் குடியேற்றங்கள் என்பவற்றால் நிறைந்து வருகின்றன.

பின்னர் 1972 ஸ்ரீமாவோ பண்டார நாயக்க உருவாக்கிய ஸ்ரீலங்கா சோஷலிச குடியரசு அரசியல் சட்டம், சிறுபான்மை இன மக்களின் உரிமைகளுக்குப் பாதுகாப்பாக விளங்கிய சோல்பரி அரசுச் சட்டத்தின் அனைத்து பாதுகாப்பு விதிகளையும் புறந்தள்ளி, தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அல்லாத இருவரை தமது கட்சியின் நியமனப் பிரதிநிதிகளாகப் பிரகடனப்படுத்தி, அவர்களின் ஒப்புதலுடன் சிங்கள மொழியும், புத்த மதமும், நாட்டின் புத்த சிங்களவர் அல்லாத எவரும் நாட்டின் தலைமைப் பதவிக்கு வரமுடியாது போன்ற சிங்கள பௌத்த பேரினவாத நாடாக இலங்கையை மாற்றினார். இதுவும் நாட்டுக்குச் சுதந்திரம் வழங்கிய சோல்பரி அரசுத் திட்டத்தை நீக்கியும், அது சிறுபான்மை மக்களுக்கு வழங்கிய அடிப்படை உரிமைகள் தொடர்பான உபவிதிகளை மீறியும் செய்யப்பட்ட குற்றமாகும்.

அடுத்த ஜனநாயகப் புட கொலையை ஜே.ஆர்.ஜெய வர்த்தன 1982லும், அதன் பின்னர் பலதடவைகள் செய்தார். 1982இல் அவர் அறிமுகப்படுத்திய நிறைவேற்று அதிகார அதிபர் ஆட்சி முறை, 6ஆவது திருத்தச் சட்டம், பயங்கரவாத தடைச் சட்டம் என்பவை, ஜனநாயக அடிப்படை மனித உரிமை கருத்துச் சுதந்திரம் என எல்லாவற்றையும் அழித்துப் போட்ட சட்டங்களின் பிதாமகன்.

அவரது வாழ்நாள் சாதனையாக யாழ் நூலக எரிப்பு, அரச படைகளின் கட்டுப் பாடற்ற அதிகார வன்முறைப் பிரயோகங்கள், கடலோர பீரங்கிப் படகுகளின் தமிழ்க் கிராமங்கள் முதல் துப்பாக்கி எறிகணைக் விமானக் குண்டுத் தாக்குதல்கள், தமிழ் மக்கள்மீது 1983 கறுப்பு ஜூலை கலவரம் என்பன, மனித குலத்தால் மன்னிக்க முடியாதவை.


இருந்த போதிலும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கண்டிக்க ஒருவரும் இன்றுவரை


Melliyalsarees
சித்திரைப் புத்தாண்டை
முன்னிட்டு
03.03.2023 முதல்
04.04.2023 வரை
Freeze
SALE
+49 176 24650540
Rheinische Strasse 29
DORTMUND
மெல்லியள்
சாரிஸ்
மலிவு
விற்பனை

காணப்படாத அவல நிலை. தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் அத்தனை பேரும் இலங்கை, இந்திய மற்றும் வெளிநாடுகளின் அரசியல் கூலித் தரகர்களாக இன்றும் சாகாமல் உள்ளனர். ஆனால் உப்புச் சப்பே இல்லாத 13ஆவது திருத்தச் சட்டத்தை, இலங்கை அரசு உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் சாக்கடைக்குள் வீசிய பின்னரும், அதன் அடிப்படையில் அரசியல் தீர்வு அல்லாத ஏதாவது ஒரு தீர்வைத் தாருங்கள் எனச் சில அரசியல் அல்லக் கைகள், தமிழ் மக்கள் சார்பில் பொது ஊடகங்களில் பிச்சை கேட்கும் அவலம் நடப்பதைக் காண்கிறோம்.

30 வருடங்களாக அறவழியிலும், 40 வருடங்களாக ஆயுதம் ஏந்தியும் போராடிய மறத் தமிழர் வீரத்தையும், மானத்தையும் உலக நாடுகளே வியந்து பார்த்த இனத்தில், இப்படியான பிச்சைக் காரர்களின் மடிப் பிச்சையிலா தமிழினத்தின் விடியல் பிறக்க வேண்டும்?

தமிழினம் 13லோ அதற்கு மேலோ, கீழோ அரிய சிங்கள பௌத்த இனவெறியர்களுடன் வாழவும் முடியாது. வாழப் போதும் இல்லை. எங்கள் தேசம் 1830இல் ஆங்கிலேயர் எப்படிப் பெற்றனரோ, அதே நிலையில் தமிழர் தேசம் எமது தாயகம் ஆகவேண்டும். இன்றைய வடக்கு-கிழக்கு மாகாணங்கள் வெள்ளையனும், சிங்களவனும் சப்பித் துப்பிய வாந்தி. அதனைத் தமிழரின் பூர்வீகத் தாயகமாகத் தமிழர் நாம் என்றுமே ஏற்க முடியாது.




அன்றிருந்த தமிழரின் தாய் மண்ணின் வரைபடம்தான், மேலே உள்ள யாழ்பாண அரசின் கட்டுப்பாட்டில் இருந்த வன்னிமைகளின் நிலப்பரப்பு இன்றைய வடக்கு கிழக்கு மாகாணம், புத்தளம், பழைய அநுராதபுரம், கண்டி உள்ளிட்ட பகுதிகளைக் காண்பிக்கிறது.

இந்தப் படத்தின் படி, தமிழரின் பூர்வீக தாயகம் எல்லை மீட்டுருவாக்கம் செய்து தனித் தமிழ் ஈழம், சர்வதேச சட்டங்களின் படி தமிழ் மக்களின் விருப்பு வாக்கின் அடிப்படையில் உலக வரைபடத்தில் தனி இறைமை கொண்ட அரசாக உலக அங்கீகாரம் பெறச் செய்வோம்.

இன்றைய சிங்கள தேசத்தின் சட்ட திட்டங்கள் எமது சம்மதம் பெறாமல் உருவாக்கப்பட்டவை. அதனால் அவற்றுக்கு நாம் கட்டுப்பட முடியாது. இவற்றை உலகறிய உரக்கச் சொல்வோம். உறுதியாகப் போராடுவோம்.



19 ஆம் ஆண்டில்....

## Radio - by - Phone

# ETR

ஐரோப்பிய தமிழ் வானொலி

**அழையுங்கள்! வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!**

# 00 4934 5483411998

**தொலைபேசி இலக்கத்தில்**

**ஐரோப்பியத் தமிழ் வானொலி**

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்

**00 49 231 700 977 60**

மேலதிக விபரங்களுக்கு... **www.etr.fm**

மகிழ்வுடன்....

அகரம் | அகர தீபம் | ETR NEWS | ETR Music

# உளவு நிறுவனங்கள்



உலக நாடுகள் பலவற்றின் இரகசியங்கள் உளவு நிறுவனங்களால் விஞ்ஞானிகளிடமிருந்தும், பல்துறை அறிஞர்களிடமிருந்தும், இராணுவத் தளபதிகளிடமிருந்தும் களவாடப் பட்டமைக்குப் பயன்படுத்தபட்ட பணம், பெண், பொருள் என்பவற்றில் பெண் ஒற்றர்களே முதன்மை வகிக்கின்றார்கள்.

இன்னும் குறிப்பாக கல்விசார் வெளி உலகிற்கு பெரிதளவில் பேசப்படாத, அறியப்படாத கல்வியாக இருப்பது, பெண்களின் உடல் சார்ந்ததும், அவர்கள் எந்தெந்த வயதில், காம உணர்வில் எப்படி இருப்பார்கள்? எந்தெந்த நாட்டுப் பெண்கள் எவ்வகையானவர்கள்? அவர்களின் உடல் உறுப்புகள் எவ்வகையானவை? என்பன போன்ற கல்வி உளவு நிறுவனங்களுக்கு உண்டு என்பதை அறியும் போது, பலருக்கு மலைப்பாக இருக்கும்.

பெண்களை உளவியல் ரீதியாகவும், உடலியல் ரீதியாகவும் பலவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பத்மினி, சித்தினி, சங்கினி, அத்தினி என பெண்களை ஆய்வு செய்துப் பிரித்தறிந்த நாடு இந்தியா.

ஒவ்வொரு வகைப் பெண்களின் உடல்வாகு எப்படியானது? அவர்கள் நவரசங்களை எப்படி வெளிப்படுத்துவார்கள்? முக்கியமாக அவர்கள் தமது காம உணர்வுக்கேற்ப தனது துணையிடமிருந்து எத்தகு சமநிலையை எதிர்பார்ப்பார்கள்? என்பதெல்லாம்கூட உளவு நிறுவனங்களில் ஒரு கல்வியாகும்.

இந்தியாவின் உளவு நிறுவனம், மற்றைய நாடுகளின் உளவு நிறுவனங்களைவிட வித்தியாசமானது. பலபடி மேலே என்று சொல்லலாம்.

அமெரிக்காவின் பிரமாண்ட திரைப்படங்கள், பாலியல் படங்களை உலக மக்கள் எவ்வாறு உள்வாங்குகிறார்களோ, அது போன்று இந்தியத் திரைப்படங்களையும், அங்கிருந்து வரும் பாலியல் படங்களையும் உலக மக்கள் உள் வாங்கிக் கொண்டேதான் இருக்கிறார்கள். (அரச சட்ட அனுமதியுடன், உலகநாடுகளின் பாலியல் படங்ளை வாங்கி பாவனையாளர்களுக்கு வியாபாரிகள் கொடுப்பது போல, இந்தியாவில் தயாரிக்கப்படுகின்ற பாலியல் படங்களையும் அரச பொதுச் சட்ட விதிக்கமைய பாவனையாளர்களுக்குக் கொடுத்து வருகிறார்கள். இன்று இத்தகு படங்களைக் காட்ட சட்ட அனுமதியுள்ள தொலைக்காட்சிகள், இத்தகு படங்களை சிறுவர்கள், பருவ வயதைத் தாண்டாத இளைஞர்கள் நலன் கருதி, பெரியவர்களின் விபரங்களைப் பெற்றுக் கொண்டு அவர்கள் பார்க்கக் கூடிய இரகசிய எண்கள் வாயிலாக அந்த வாய்ப்பைக் கொடுத்திருக்கின்றன). அமெரிக்க உளவு நிறுவனமான சிஐஏ தாங்கள் பெறவிருக்கும் இரகசியத்தின் பெறுமதி கருதி, அவர்களே பாலியல் படங்களைத் தயாரித்துக் இராணுவ, விஞ்ஞான இரகசியங்களைக் காத்து வைத்திருப்பவருக்கு முதல் தூண்டிலாக அதனைக் கொடுப்பார்கள்.

அது போல இந்திய உளவு நிறுவனமான றோவும் பாலியல் படங்களைத் தயாரித்து, அதை தமக்குத் தேவையான இரகசியங்களை வைத்திருப்பவருக்கு அதனைக் கொடுத்து, அவரை தமது வழிக்குக் கொண்டு வருவார்கள்.

உலக நாடுகளில் ஆரம்ப கால மன்னர்களின் ஆட்சியை, ஒரு நாட்டின் மீது இன்னொரு நாடு படையெடுப்பதற்கான காரணங்களை, அதுவும் குறிப்பாக இந்திய முடிமன்னர் ஆட்சிகளின் வரலாறுகளைப் பார்க்கையில், பெரும்பாலான அரசர்கள் பெண்ணாசை கொண்டவர்களாகவும், இன்னொரு நாட்டு இராணி மீதோ, இளவரசிகள் மீதோ தீராத ஆசை கொண்டு (தீராத ஆசை என்பது அவர்களின் உடலழகு மீது கொண்ட காம இச்சையுமே, போருக்கு வழிவகுத்து இராணிகளையோ, இளவரசிகளையோ கவர்ந்து செல்வதற்கு வழிவகுத்திருக்கின்றன).

இந்திய அரசர்கள் பல மனைவிகளைக் கொண்டவனாகவும், நூற்றுக்கு மேற்பட்ட அந்தப்புரத்து இளவரசிகளைக் கொண்டவனாகவும் இருந்திருக்கிறார்கள். இவ்வாறான அரசாட்சியைக் கடந்து வந்த இந்தியாவில், இன்று தயாரிக்கப்படும் பாலியல் படங்கள் தொட்டு, திரைப்படங்கள் வரை உலக நாடுகளில் பலத்த வரவேற்பைப் பெற்றுள்ளன குறிப்பாக இந்தித் திரைப்படங்களை மேற்கத்தைய நாட்டு மக்களும், இஸ்லாமிய மக்களும் விரும்பிப் பார்க்கிறார்கள். இந்தியத் திரைப்பட நடிகைகள் மீது மோகம் கொண்டவர்களாக மயங்கிக் கிடக்கிறாரர்கள்.

அதிலும் இந்தி நடிகைகளின் நடிப்பை இரசிப்பதைவிட, மேற்கத்தைய ஐரோப்பிய மக்களின் பெரும்பாலானவர்கள் அந்நடிகைகளின் உடல் வனப்பில் ஆசை கொண்டவர்களாக அதனைச் சிலாகித்து மகிழ்கிறார்கள்.

ஒரு நடிகையை இரசித்து, அவள் மீது ஆசை கொண்டு, இவள் என் காதலியாக இருக்கக்கூடாதா, இவள் எனது மனைவியாக இருக்கக்கூடாதா எனச் சபலப்பட்டு ஏங்கி நிற்கும் சாதாரண மனிதனுக்கும், அதே ஆசையை நடிகை மீது கொண்டிருக்கும், ஒரு விஞ்ஞானக் கழகத்தின் பொறுப்பாளராக இருந்து கொண்டு, உலகை மிரள வைக்கும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் தரவு இரகசியங்களை வைத்திருக்கும் ஒரு விஞ்ஞான அதிகாரிக்கும், ஒரு நாட்டுக்குத் தேவையான இராணுவக் கட்டமைப்பை உருவாக்கி, அதன் இரகசியங்களுக்குப் பொறுப்பாகவிருக்கும் முப்படைகளின் தனித்தனி தளபதிக்கும், கூட்டிணைவான முப்படைத் தளபதிக்கும், ஒரு நாட்டின் நிதிக் கொள்கையை வகிக்கும் நிதி விற்பன்னர் அல்லது அறிஞருக்கும், ஒரு



GGS
FOOD SERVICE
CONTACT
R.P. PARAMESH
02305 93 73 75
017 93 91 607

நாட்டின் பொளாதாரத்தை ஒழுங்கமைக்கும் அறிஞருக்கும் இடையில் இருக்கும் ஒற்றுமை ஆசைப்படுதலாக இருந்த போதும், சாதாரண மனிதனின் ஆசைப்படுதல் வெறும் ஆசைப்படுதலாக மட்டுமே இருக்கும். ஆனால், மேற்கூறப்பட்டவர்களின் இருக்கும் ஆசைப்படுதல் அவர்களிடமிருந்து இரகசியங்களை இழுக்கும் தூண்டிலாக இருக்கும்.

அமெரிக்காவின் சிஐஏ மற்றைய நாடுகளில் உளவு பார்க்கும் போது, உளவு பார்க்கும் ஒற்றர் சில வேளைகளில் தான் உளவு பார்க்கும் ஒற்றன் என்பதை, ஏதோ ஒரு இடத்தில் மற்றவர் சந்தேகப்படும்படி நடந்து கொள்வார். ஆனால் இந்திய ஒற்றனைக் அவ்வாறு கண்டுப்பிடிக்கவே முடியாது.

இந்தியா ஒரு ஆன்மீக நாடு, அறவழிப் போரை நடத்திய நாடு. ஒரு நாட்டுக்குள் ஊடுருவி, உளவு பார்க்காது, அதற்காக பணம், பெண், பொருளை இலஞ்சமாகக் கொடுத்து, தமக்கு வேண்டியவரைத் தனது வலையில் விழுத்தாது என ஒரு அபிப்பிராயம் இருக்குமானால் அது முற்றிலும் தவறு.

எல்லா நாட்டு உளவு நிறுவனங்களுக்கும் அவர்களின் செயல்பாடுகளுக்காக, வருடா வருடம் வரையறுக்கப்பட்ட நிதி ஒதுக்கப்பட்டு வருகின்றது. ஆனால், இந்திய உளவு நிறுவனமான றோவுக்கு வரையறுக்கப்படாத நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எந்த நேரத்திலும், எந்த நாட்டுக்கும் செல்வதற்கான விமான வசதி முதல் அத்தனை சலுகைகளும் றோ உறுப்பினர்களுக்கு உண்டு.

இந்தியாவின் கொடியில் இருக்கும் அரசியல் அசோக தர்மிஸ்ட இலச்சினை வேறு, அரசியல் கோட்பாடு வேறு, உலக நாடுகளுக்குள் தன்னலம் கருதி, தனது றோ அமைப்பினூடாக ஊடுருவும் கோட்பாடு வேறு.

இந்தியாவில் இன்று வரையும் அரசியல் சூழ்ச்சி மிகுந்த ஒரு இராசதந்திரியாக சாணக்கியனையே விதந்துரைக்கிறார்கள். ஒரு சாதாரண இந்தியக் குடிமகனுடன் உரையாடும் போது, அவரிடமிருந்து அவரைப் பற்றி நாம் அறிந்து கொள்ள எடுக்கும் முயற்சிகளின் போது, அவர் தன்னிடம் அறிவதற்கு ஒன்றுமில்லை என்பது போலவாய் திறவாமையும், உரையாடலைத் திசை திருப்பும் வசீகர உரையாடும் தன்மைக்கூடாகவும் எம்மைப் பற்றி நாம் எம்மையறியாமலே உளறிக் கொட்டிடும் நிலையை அவர் உருவாக்கி விடுவார்.

ஒரு சாதாரண இந்தியக் குடிமகனே இத்தகையவனாக இருப்பாரானால், உளவு நிறுவனங்களில் பாண்டித்தியம் பெற்ற அங்கத்தவர்கள், ஒற்றர்கள் எப்படி இருப்பார்கள்? என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.



# BCN TRAVELS (REISEBÜRO)

## Consulting Network.ug

(Travels-Business-Worldwide)



RYANAIR

easyJet

KLM

Emirates

AIR CANADA

SINGAPORE AIRLINES

QANTAS

International Monye Transfers

Ria Worldwide Money Transfer

small world Money Transfer

Last Minute Tickets avaliable on Sunday and Holidays

**Tel : 01638714369**

Flugtickete und hotel kann man auch hier buchen

Rheinische str-72
44137 Dortmund

023110876360
023110876361
Fax : 023110876362

bcntravels@hotmail.de

*People's Insurance*
*Covid19 Insurance*

Health Declaration Form
Ministry of Health - Sri Lanka

SRILANKA, INDIA CANADA, AUSTRALIEN, SINGAPUR, ERUOPEA, UK, USA

AIR FRANCE

Lufthansa

الطيران العماني OMAN AIR

QATAR AIRWAYS القطرية

एअर इंडिया AIR INDIA

BRITISH AIRWAYS

www.bcn-travels-dortmund.com



# எங்கள் பகைவர் எங்கே(ா) மறைந்தார்

**சண் தவராஜா**

உரிமைகளுக்காகப் போராடி, ஆயிரக் கணக்கான உயிர்களை விலையாகத் தந்த ஒரு இனத்தின் அரசியல், இன்று சிரிப்பாய்ச் சிரிக்கிறது. ஒன்று பத்தாகி, பத்து நூறாகி என்று சொல்வதற்கு ஒப்ப, அரசியல் கட்சிகள் கிளைவிட்டுச் செல்கின்றன. ஒற்றுமை அவசியப்படும் இன்றைய தருணத்தில் தமிழ் அரசியல் கட்சிகள் தமக்கிடையே பிளவுபட்டு நிற்பதைப் பார்க்கையில் சிரிப்பதா, அழுவதா எனப் புரியாமல் உள்ளது. ஜனநாயகத்தில் பல்வேறு கொள்கை நிலைப்பாடுகள் நிலவுவது சகஜமானது, தவிர்க்க முடியாதது. ஆனால், ஒரே கொள்கையைக் கொண்டுள்ளதாகப்




பிரகடனம் செய்து விட்டு, தனித்தனியாகச் செயற்படுவதை எவ்வாறு புரிந்து கொள்வது?

ஒற்றுமையின்மை தமிழர்களின் பிறவிக் குணம், பரவணிப் பழக்கம் எனக் கூறிவிட்டுக் கடந்து செல்லுதல் அறமற்ற செயல். ஒற்றுமைக்காகக் கடுமையாக முயற்சி செய்துவிட்டு, அது முடியாமல் போய்விட்ட சந்தர்ப்பத்தில், தோல்வியை ஏற்றுக் கொள்வது இயல்பானது. ஆனால், ஈழத் தமிழரின் அரசியல் களத்தில் ஒற்றுமை முயற்சிகள் ‘சாண் ஏற, முழம் சறுக்கும்’ நிலையிலேயே உள்ளதைப் பார்க்க முடிகின்றது.

ஒற்றுமை யாருக்காக? அதன் நன்மைகள் என்ன? பிளவுபடுவதால் யாருக்கு லாபம்? என்பவை தொடர்பில் சலிக்கும் வரை பேசியாகி விட்டது. ஒற்றுமை தொடர்பில் வாய் வலிக்கப் பேசும் அரசியல் தலைவர்களில் ஒருவர் கூட தாம் விரும்பும் ஒற்றுமையைச் செயல்வடிவில் காட்டத் தயாராக இல்லை. தனி மனித முரண்பாடுகளை முன்னிறுத்தி, மக்கள் பிரச்சனைகளைப் புறந்தள்ளும் போக்கைக் கைவிடாத வரை, இந்தப் போக்கில் மாற்றம் வரப் போவதுமில்லை.

அரசியல் பணி என்பது, மக்களின் நலனை நோக்காகக் கொண்ட ஒரு உன்னதமான சேவை என்பதை, அரசியல்வாதிகள் மறந்து வெகு காலமாகி விட்டது. தமது செல்வாக்கை நிலைநிறுத்திக் கொள்ளவும், தமது குடும்பத்தை வளப்படுத்திக் கொள்வதற்கு இலாபகரமான ஒரு தொழிலாக அதனை நினைப்பவர்கள் அரசியலில் நுழைந்துவிட்ட நிலையில், இதனை விட அதிகமாக அத்தகையோரிடம் இருந்து எதிர்பார்க்க முடியாது என்பதே யதார்த்தம். ஆனால், மேடைகளில் தாம் பேசும் விடயங்களையாவது நிறைவேற்றுவதற்கு அவர்கள் முயன்றாலேயே, அவர்களுக்கு வாக்களித்த மக்கள் ஓரளவேனும் நன்மை அடைவார்கள்.

இன்றைய நிலை என்ன? யாழ் குடாநாட்டை எடுத்துக் கொண்டால், அங்கே 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களுள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் தென்னிலங்கை சார்பு, தமிழ்த் தேசிய விரோத அரசியல்வாதிகள் என்ற நிலைப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளனர். ஒரு வகையில் அவர்கள்

தீண்டத்தகாதவர்களாக(?) வகைப்படுத்தப் பட்டுள்ளனர். ஏனைய ஐவரில், மூவர் முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள். தற்போது பிற்போடப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தலை ஒட்டி, தமிழரசுக் கட்சி வெளியிட்ட அறிவிப்பு ஒன்றுடன், இந்தக் கூட்டமைப்புச் சிதைந்து விட்டது. த.சித்தார்த்தன் இயல்பாகவே கூட்டமைப்பில் இருந்து வெளியேறும் நிலை உருவாகி விட்டது. ஏனைய இரண்டு பிரதிநிதிகளான சிறிதரன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் மத்தியில் நிலவும் பிளவு, தமிழ்கூறும் நல்லுலகம் அறிந்த ஒன்று.

விக்னேஸ்வரன் மற்றும் கஜேந்திரகுமார், கஜேந்திரன் போன்றோர் ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்தவர்களாக இருந்து, முரண்பட்டு வெளியேறியவர்களே!. இவர்கள் மூவரும் எந்தக் காலத்திலும் ஒற்றுமை முயற்சிக்கு இணங்கிவர மாட்டார்கள். அதிலும் கஜேந்திரகுமார் மற்றும் கஜேந்திரன் அணியினர், எந்தக் காலத்திலும் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளோடு கரங்கோர்க்க மாட்டார்கள். அவர்களின் நிழல் எசமானர்களான புலம்பெயர் கொடையாளிகள், அவர்களை அதற்கு அனுமதிக்கவும் மாட்டார்கள்.

மட்டக்களப்பிலும் இதே நிலையே!. 4 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் திசைக்கு ஒருவராகவே உள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தெரிவான சாணக்கியன் மற்றும் கருணாகரன் ஆகியோர் இப்போது வெவ்வேறு அணிகளில் உள்ளனர். அது மாத்திரமன்றி பொது மேடைகளில் ஒருவரை ஒருவர் விமர்சித்தும் வருகின்றனர். ஏனைய இருவருமான பிரதியமைச்சர்கள் சந்திரகாந்தன் மற்றும் வியாழேந்திரன் ஆகியோர், ஒரே அரசாங்கத்தில் அங்கம் வகித்தாலும், ஒருவருக்கு ஒருவர் விரோதிகளாகவே உள்ளனர். யாழ் குடாநாட்டில் எவ்வாறு டக்ளஸ் தேவானந்தாவும், அங்கஜனும் நடந்து கொள்கிறார்களோ? அதைப் போன்றே இவர்களும் முட்டி மோதிக் கொண்டிருக்கின்றனர்.

கிட்டத்தட்ட இதே நிலையே வன்னி மாவட்டத்திலும் உள்ளது.

வீடு மற்றும் குத்துவிளக்குச் சின்னத்தை வைத்துள்ள இரண்டு தரப்பினரும் தாமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என உரிமை கோரிக் கொள்கின்றனர். இவர்கள் ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்தவர்கள் தானே? இப்போது என்ன புதிதாக உரிமை கோரல்? எனப் புரியாமல் மக்கள் குழம்பிப் போய் உள்ளனர்.

மக்களின் குழப்பத்தை ஊடகங்கள் மேலும் ஊதிப் பெருப்பிக்கும் வேலையில்



உள்ளன. சமூகத்தின் நான்காவது தூண் எனக் கருதப்படும் ஊடகங்களின் போக்கு உண்மையிலேயே மிகக் குழப்பமாக உள்ளது. நேற்றுவரை ஒற்றுமை பற்றிப் பேசிய ஊடகங்கள், இன்று ஒற்றுமைக்கு எதிராகப் பேசத் தொடங்கியுள்ளன. மறுதலையாக, முன்னர் ஒற்றுமைக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்த ஊடகங்கள், தற்போது ஒற்றுமைக் குரலுக்கு ஆதரவாகப் பேசத் தொடங்கியுள்ளதைப் பார்க்க முடிகிறது. அணி திரட்டல்கள் அரசியல் தலைமைகளிடம் மாத்திரம் தென்படவில்லை. ஊடகங்கள் மற்றும் ஊடகர்கள் மத்தியிலும் ஒரு வகையான அணி திரட்டலை அவதானிக்க முடிகின்றது.

சமூக அக்கறையுள்ள அறிவு ஜீவிகளைத் தற்காலத்தில் காணவே முடியாமல் போய்விட்டது. சமயம் வளர்த்தல், தமிழ் வளர்த்தல் போன்ற துறைகளில் காட்டும் அக்கறையைச் சமூகத்துக்கு வழிகாட்டும் துறையில் காட்டுவதற்கு அவர்கள் தயாராக இல்லை. 'அவர்கள் என்ன வைத்துவிட்டா வஞ்சகம் செய்கிறார்கள்?' என்ற கேள்வி அவர்களைப் பொறுத்தவரை நியாயமானதாகவே உள்ளது. பாவம் மக்கள். போரின் வடுக்களையும், வலிகளையும் அதிகமாகத் தாங்கியவர்கள் அவர்கள். இன்னமும் கூடக் கடந்த காலப் பாதிப்புகளில் இருந்து மீண்டுவிட முடியாத நிலையில் அவர்கள் உள்ளனர். போர்க்காலத்தில் தாங்கள் இழந்துபோன நிம்மதியையும், உறவுகளையும், பொருண்மியத்தையும் இன்னமும் தேடிக் கொண்டிருக்கின்றார்கள்.

அத்தோடு தமக்கான உண்மையான, நேர்மையான தலைமைத்துவத்தையும் கூடத் தேட வேண்டிய நிலையில் அவர்கள் வைக்கப்பட்டுள்ளனர். மேய்ப்பர்கள் இல்லாத மந்தைகளின் நிலையில் உள்ள அவர்களின் துயரம், அரசியல் தலைவர்களின் கோமாளித்தனமான செயல்பாடுகளால் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதையே பார்க்க முடிகின்றது.

தமிழர் ஒற்றுமை தொடர்பில் பாவேந்தர் பாரதிதாசன் பாடிய பாடல் வரிகள் பிரசித்தமானவை. 'எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்? இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே" என்ற அந்த வரிகள் ஒற்றுமைக்கு அழைப்பு விடுப்பவை. ஆனால், ஈழ மண்ணின் யதார்த்தம், 'எங்கள் பகைவர் எங்கும் மறையவில்லை, எங்கள் மத்தியிலேதான் உள்ளனர்' என்பதைப் புலப்படுத்துவதாகவே உள்ளது.




மாபெரும்
ராஜ
முத்திரை
வாடிக்கையாளர்களின்
பேராதரவுடன்
21ஆம் ஆண்டில்....
SK
SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
ADLER STR. 33, 44137
DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648

**சிறுகதை**

சபீனா சோமசுந்தரம்

சென்ற மாத தொடர்ச்சி...

தன் இச்சைக்கு பலியாக்க முயன்ற போது, உயிரை விட்ட அந்தச் சிறு பெண்ணை இவன் தன் மகளோடு ஒப்பிட்டுப் பேச, சேகருக்கு அவமானத்தில் உடல் சுருங்கிப் போனது.

இச்சை தலைக்கேற, எதையும் யோசிக்காமல் எப்படி ஒரு காரியத்தைச் செய்து விட்டேன் என மனம் குற்ற உணர்ச்சியில் விம்மியது.

சேகருடைய மகளை விட, இரண்டு வயது பெரிய பிள்ளை அவள். வினோத்தை விட ஒரு வயது சிறியவள். பக்கத்து வீட்டுப் பிள்ளை. அடிக்கடி சேகர் வீட்டிற்கு வருவாள்.

“அங்கிள்.. அங்கிள்..” என்று சேகரை உரிமையோடு கூப்பிடுவாள். தன் தந்தை போல் அவனையும் நினைத்தாள் அந்த சின்னவள். ஆனால், சேகருக்கு ஆறு மாதங்களுக்கு முன் தான் பூப்படைந்து, பருவ வயதின் அழகோடு மெருகேறி நின்ற அவள் மீது, ஓர் அற்ப இச்சை. பல முறை அவன் தனிமையாக இருந்த நேரங்களில், அவள் வீட்டிற்கு வரும் போது தன் ஆசையை வெளிப்படுத்த முயன்று தோற்றுப் போனான்.

அப்படியிருக்கையில் தான் அவர்கள் ஊர் கண்ணகி அம்மன் ஆலய உற்சவம் இடம்பெற்றது. இறுதி நாள் திருவிழாவில் அனைவரும் கோவிலில் இருக்க, அன்றும் பட்டுப் பாவாடை, தாவணியில் குமரியாய் நின்ற அவளைப் பார்க்க சேகருக்கு மனதில் ஓரத்தில் கிடந்த ஆசைக் கொளுந்து விட்டு எரியத் தொடங்கியது.

கோவிலில் அவன் கண் அவளை விட்டு அகலவில்லை. தாய் ஏதோ எடுத்து வரும்படி அவளை வீட்டிற்கு அனுப்ப, அவளை மோப்பம் பிடித்து சேகர் பின்னாலேயே வீடு வந்து சேர்ந்தான். மாலை நெருங்கி, இருட்டி விட்டிருந்தது. சேகர் மெல்ல பக்கத்து வீட்டு கேற்றைத் திறந்து கொண்டு உள்ளே போனான். வீடு திறந்து கிடந்தது. சுற்றி ஒரு கண்ணோட்டம் விட்டான். யாரும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டான்.

வீட்டினுள் போனான், அவள் இல்லை. ஒவ்வொரு அறையாக எட்டிப் பார்த்தான், அவளை காணவில்லை. வீட்டின் பின்பக்கம் போனான். அங்கே கிணற்றில் தண்ணீர் வாளியை நிரப்பி, கயிறைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தாள் அவள்.

சேகர் போய் அந்தக் கயிற்றைப் பிடித்து இழுத்து, வாளியை தூக்கினான். அவள் திடுக்கிட்டு திரும்பி பார்த்து சேகரை அங்கு கண்டதும் “ஐயோ அங்கிள் நீங்களா..?

# பெற்ற(வன்) கடன்



பயந்தே போயிட்டன்..” என்று புன்னகைத்தாள்.

சேகர் பதிலுக்குப் புன்னகைத்துக் கொண்டு, அவளை நெருங்கினான். ஆரம்பத்தில் அவனின் செயலின் அர்த்தம் புரியாத அவள், புரிந்த பின் உடைந்து போனாள். தன் தகப்பனை போல் எண்ணிய அவனிடம் அவள் அதை எதிர்பார்த்திருக்கவில்லை.

கெஞ்சினாள், தன்னை விட்டுவிடும்படி. ஆனால் அவனுடைய இச்சை தலைக்கேறியிருந்தது. அவன் தன் நீண்ட நாள் இச்சையை தீர்த்துக் கொள்வதில் குறியாக இருந்தான். அவளுடைய அழுகையோ, கெஞ்சலோ அவன் காதுகளில் விழவேயில்லை.

தப்பிக்கப் போராடினாள், முடியாமல் போகவே தன் ஆசைகள் கனவுகள் எல்லாவற்றையும் சேர்த்துக் கொண்டு உள்ளம் கதறியழ அந்தக் கிணற்றில் குதித்தாள்.

சேகர் இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை. அதிர்ச்சியில் இப்படியே நின்றுவிட்டான். தன் ஆசை தீரவில்லை என்ற குறை ஒரு பக்கமும், யாரும் வந்து விட்டால் என்ன செய்வது? என் பயம் ஒரு பக்கமும் அவனை வாட்டியது.

கிணற்றினுள் எட்டிப் பார்த்தான். ஆழமான இருளைத் தவிர, ஒன்றும் தெரியவில்லை. தயங்கியபடி நின்றவன், தன்னைச் சுதாகரித்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறினான்.

வேகமாக கோவிலை நோக்கி நடந்தவனின் மனமெல்லாம் ஏமாற்றம். கைக்கு எட்டியும், வாய்க்கு எட்டவில்லை என்று மனம் கொதித்தது. கோவிலில் போய் ஒன்றும் தெரியாதவன் போல் கூட்டத்தோடுக் கூட்டமாய் நின்று கொண்டான்.

வீட்டிற்குப் போன பிள்ளையைக் காணவில்லை. பிள்ளை வீட்டிலும்




இல்லை, கோவிலுக்கும் திரும்பி வரவில்லை. திருவிழா மகிழ்ச்சி யார் மனதிலும் ஒட்டவில்லை. ஊரே சேர்ந்து ஊர் முழுவதும் பிள்ளையைத் தேடினார்கள். மறுநாள் வீட்டின் கிணற்றில் இருந்து சடலம் மீட்கப்பட்டது.

'என் பிள்ளை தற்கொலை செய்து கொள்ள மாட்டாள்' என அந்த அப்பாவி சிறுமியின் தாய் கதறினாள். இருட்டு தானே கிணற்றில் தவறி விழுந்து விட்டாள் போலும் என்றுதான் ஊரே பேசியது.

எப்படியோ விபத்து அல்லது தற்கொலை என்று முடிவானதில் சேகருக்கு மனநிம்மதி. 'கொலை' என்ற சிறிய சந்தேகம் வந்தாலே பொலிஸார் தோண்டிப் பிடித்து, கண்டுப்பிடித்து விடுவார்கள். ஆனால், நிலைமை சேகருக்குச் சாதகமாகவே இருந்தது.

"அப்பா.. " என்ற அதட்டல் குரலில் சுயநினைவிற்கு வந்தான் சேகர்.

யாரும் கண்டுப்பிடிக்க வாய்ப்பே இல்லை என்று அவன் நிம்மதியாக இருக்க, அவன் மகனே அதைக் கண்டுப்பிடித்து விட்டான் என்பதை, சேகரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

மகனின் முகத்தைப் பார்க்க முடியாமல், கூனிக்குறுகி போய் நின்றான் சேகர்.

வினோத்திற்குக் கூட அவளின் மரணம் பெரும் கவலையைக் கொடுத்தது. தன் தங்கை போல்தான் அவளையும் அவன் நடத்தினான். அவளும், அவனைக் காணும் போதெல்லாம் "ஹாய் அண்ணா.. " என்று புன்னகைப்பாள்.

வினோத்திற்கு அதை நினைக்க, நினைக்க தாங்கிக் கொள்ள முடியவில்லை. இருவரும் எதுவும் பேசவில்லை. அறை முழுவதும் மயான அமைதி.

"நீங்க எங்களுக்கு வேணாம்பா.. " அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு வினோத்தினுடைய வார்த்தைகள் இடியென இறங்கியது சேகரின் காதுகளில்.

"அப்பா இந்த விசயம் வெளில தெரிஞ்சா, நாங்க இந்த ஊரில் வாழ முடியாதுப்பா.. அம்மாவ ரொம்பப் பிழையா கதைப்பாங்க.. தங்கச்சிய வாழ விட மாட்டாங்க.. அப்பன போலதான் பிள்ளயும் என்டு, என்னையும் உங்கள மாதிரி கேவலமான மனுசனாதான் பாப்பாங்க.." என்றான் வினோத். இதை சொல்லும் போது அவன் முகத்தில் ஒரு வித கடுமையைக் கண்டான் சேகர்.

மகனுடைய இந்த நிலை சேகருக்குப் பயத்தை உண்டு பண்ணியது.

உள்ளே மண்டியிட்டு அழும் தன் மனதை அடக்கி கொண்டு, கீழே விழுந்து சேகரின் கால்களைப் பிடித்துக் கொண்டு அழுதான் வினோத்.

"அப்பா.. வேற என்ன செய்யிற என்டு எனக்கு தெரியலப்பா..? நீங்க இருக்கிற வீட்டுல என்ர தங்கச்சிய வச்சிருக்கவும் பயமா இருக்குப்பா.." என்று சொல்லி விம்மினான் வினோத்.

அந்த வார்த்தைகள் சேகரின் மனதைச் சுக்குநூறாக நொறுக்கியது. சேகர் ஒன்றும் பேசவில்லை. சிலை போல் அப்படியே நின்றான்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு எழுந்தான் வினோத். அறைக் கதவை நோக்கி நடந்தான். கடைசியாக ஒரு முறை தகப்பனைத் திரும்பி பார்த்தான். வெறுமையாக உறைந்து போய் நிற்கும் தன் தகப்பனைப் பார்க்க அவனால் தாங்க முடியவில்லை.

வேகமாக அங்கிருந்து வெளியேறினான். ஒரு சேட்டை எடுத்து போட்டுக் கொண்டு, புத்தகங்களை எடுத்துக் கொண்டு வீட்டிலிருந்து வெளியேறினான். வாசல்படியை அவன் தாண்ட, சேகர் தனது அறைக் கதவைத்

தாழிடும் சத்தம் வினோத்தின் காதுகளில் கேட்டது.

அவனால் அங்க நிற்க முடியவில்லை. கால்கள் வலுவிழந்தது, நிற்க தெம்பில்லை. அங்கிருந்து வேகமாக வெளியேறினான். வழமையாகத் தோட்டத்தில் போய் அமர்ந்திருந்துதான் படிப்பான். தோட்டத்தை நோக்கி நடந்தான்.

வழியெங்கும் "அப்பா.. அப்பா.." என மனம் கதறியது.

தோட்டத்திற்குப் போனான். அம்மா கேட்டால் என்ன சொல்வது? என்று மனம் படபடவென்று அடித்துக் கொண்டது.

ஆனால், அவனது தாய் அங்கு இருக்கவில்லை. அவள் ஏற்கனவே அங்கிருந்து கிளம்பிவிட்டிருந்தாள்.

புத்தகத்தை விரித்துக் கொண்டு அமர்ந்தான். மனம் புத்தகத்தில் நிலைக்கவில்லை. வினோத்தின் மனம் சேகரின் அறையை விட்டு வெளியே வரவில்லை. அங்கேயே நின்று கொண்டு "அப்பா.. அப்பா.. " எனகதறிக் கொண்டிருந்தது.

அரைமணி நேரம் கடந்திருந்தது. தூரத்தில் வினோத்தின் பெயரைச் சொல்லி, அழைத்துக் கொண்டு ஒரு சிறுவன் ஓடி வந்தான். வினோத்திற்கு "ஐயோ.. " என்றிருந்தது.

"அண்ணா உங்கம்மா வரட்டாம்.. உங்க அப்பா தூக்கில தொங்கிட்டாரு.. " என்றான் வந்தவன் மூச்சிரைக்க.

புத்தகத்தைப் பற்றியிருந்த வினோத்தின் கைகள் இறுகியது. புத்தகங்களை அங்கேயே போட்டுவிட்டு எழுந்து ஓடினான் வினோத்.

வீட்டை நெருங்க நெருங்க, அவனது தாயின் கதறல் காற்றோடு அவன் காதுகளில் இரைச்சலோடு இறங்கியது. அந்த இரைச்சலோடு அவன் மனமும் "அப்பா.. அப்பா.. " என்று ஓலமிட்டது.

**முற்றும்.**



Smt. விதியா மயூரன், சுவிஸ்



## 18. ஸிம்ஹமுக விநியோகஹ

ஹோமே ஷஷே கஜே தர்பசலனே பத்மதாமிணி /
ஸிம்ஹானனே வைத்யபாகே சோதனே ஸம்ப்ரயுஜ்யதே //

### கருத்து



| | |
|---|---|
| ஹோமே | ஓமம் வளர்த்தல் |
| ஷஷே | முயல் |
| கஜே | யானை |
| தர்பசலனே | தர்பைப் புல் |
| பத்மதாமிணி | தாமரை பூ மாலை |
| ஸிம்ஹானனே | சிங்கத்தின் முகம் |
| வைத்யபாகே | மருந்து மூலிகைகளை |
| கலத்தல் | |
| சோதனே | பரிசோதித்தல் |

**ஸம்ப்ரயுஜ்யதே**

## 19. காங்கூல விநியோகஹ

லகுசஸ்ய பலே பால கிங்கிணியாம் கண்டிகார்தகே / சகோரே க்ரமுகே பாலகுசே கல்ஹாரகேததா // சாதகே நாலிகேரேச காங்கூலோ யுஜ்யதே கரஹ/

### கருத்து



| | |
|---|---|
| லகுசஸ்யபலே | ஒருவகை பழம் |
| பாலகிங்கிணியாம் | சிறுவர் அணியும் மணி |
| கண்டிகார்தகே | பெரிய மணி |
| சகோரே | சகோரப்பறவை |
| க்ரமுகே | பாக்குமரம் |
| பாலகுசே | இளம் பெண்ணின் மார்பு |
| கல்ஹாரகேததா | அல்லிப்பூ |
| சாதகே | சாதகப்பறவை |
| நாலிகேரேச | தேங்காய் |

**காங்கூலோ யுஜ்யதே கரஹ**

**(தொடரும்)**




# QATAR AIRWAYS

மே 1முதல் ஜூன் 18 வரை



CENTURY
TRAVELS

Düsseldorf to Colombo

SPECIAL OFFER

Rheinische Str.29-44137-Dortmund

0231 58 96 557 | 0231 55 74 319

www.centurytravels.de

info@centurytravels.de

# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**

மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை
விற்பனை செய்ய
விரும்புவோர்
தொடர்புகொள்ளுங்கள்

25
ஆண்டுகளாக
உங்களோடு நாங்கள்...

தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

மண்மணம் மாறாத சுவைதரும்
தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்

ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்




www.jaffnastores.com
info@jaffnastores.de
Tel. - 0521 174794
Mobile - 01732807906

Feilenstraße 8
33602 Bielefeld

